Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 09 செவ்வாய்க்கிழமை (25.09.2012) பக்கங்கள் 20 ஓசை – 359

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0212219510 (C/1675)




பன்றிக்கு பாலூட்டிய 'மில்கோ' 06



சுழிபுரம் விக்ரோரியா 2 ஆம் இடம் 08



பாடசாலையில் நூலகப் பயன்பாடு 11



விருது பெற்ற பாலர் பாடசாலை 17




அகற்றக்கோரி ஆர்ப்பாட்டம் 13

# வடக்கிற்கு இன்றுமுதல் லக்ஷபான மின்சாரம்

## கிளிநொச்சி வருகிறார் ஜனாதிபதி

(கிளிநொச்சி)

**பலவருடங்களாகத் தடைப்பட்டிருந்த வடக்கிற்கான லக்ஷபான நீர் மின்சார விநியோகம் மீண்டும் இன்று முதல் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. கிளிநொச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் மின்சார பரிவர்த்தனை நிலையத்தை ஜனாதிபதி இன்று திறந்துவைப்பதன் மூலம் வடக்கிற்கான லக்ஷபான மின்சார விநியோகம் ஆரம்பமாகவிருக்கிறது.**

அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்திற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்று காலை விசேட உலங்கு வானூர்தி மூலமாக கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவிருக்கும் ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் மின்சார பரிவர்த்தனை நிலையத்தை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து கிளிநொச்சிக்கான பொதுச்சந்தைக் கட்டடத்தை திறந்துவைக்கும் வைபவத்திலும் கலந்துகொள்ளவுள்ளார்.


அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திற்கும் தலைமை தாங்கவுள்ளார். மேற்படி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கான சகல ஏற்பாடுகளையும் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மேற்கொண்டிருக்கிறது.

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு இந்தியாவுக்கு

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடனான பேச்சுவார்த்தை உட்பட சில சுற்று பேச்சுக்களில் பங்குபற்றுவதற்காக புதுடில்லிக்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்திய அரசாங்கம் அழைத்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒக்டோபர் 10 ஆம் திகதி புதுடில்லி வருமாறு இந்திய வெளிவிவகார அமைச்சு அழைத்துள்ளதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். அங்கு அவர்கள் எதைப் பற்றி பேசவுள்ளனர் எனக் கேட்ட போது, எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது மட்டும்தான் நடந்துள்ளது என்றார்..

# பிரதேச செயலகம் புதிய கட்டடத்தில்



கடந்தகால யுத்தத்தினால் சேதங்களுக்குள்ளான பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகக் கட்டடத்தொகுதி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீள்ச்சித்திட்டத்தின் கீழ் மீள்நிர்மாணம் செய்யப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்த காலத்தில் சேதமாக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் சுமார் பதினெட்டு மில்லியன் ரூபா செலவில் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் ஆகியோர் முற்பகல் 10.30 மணியளவில் இக் கட்டடத் தொகுதியினை திறந்து வைத்தனர். மீள் குடியேற்றத்தின் பின் மூன்று ஆண்டுகளாகக் கட்டட வசதியின்றி பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கிவந்த இச் செயலகத்தில் புதிதாக நியமனம் பெற்ற பயிலுநர் பட்டதாரிகள் அமர்வதற்குக்கூட இடமின்றி பணிகளில் ஈடுபட்டு வந்தனர் இந்நிலையில் நேற்று இக்கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்பட்டதனுடாக அலுவலகப்பணிகள் சீராக இடம்பெறும் என பிரதேச செயலகத்தினர் தெரிவிக்கின்றனர். இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின்

19 ஆம் பக்கம் பார்க்க

## கழிவு ஓயில் வீச்சு; இரு மாணவர்கள் கைது

வடமராட்சி தேவரையாளி இந்துக்கல்லூரிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் நாசகாரம் செய்த குற்றச்சாட்டில் இருமாணவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்து எச்சரித்து விடப்பட்டனர். குறித்த பாடசாலையில் காவலாளி கடமையில் இருந்த வேளை ஞாயிற்றுக்கிழமை இரவு 8.00 மணியளவில் உட்புகுந்தவர்கள் வகுப்பறைக் கட்டடங்களுக்கு கழிவு ஓயில் ஊற்றியும் அங்கு குப்பைத் தொட்டியில் இருந்த குப்பைகளையும் எரித்து நாசகாரம் செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸாருக்கு அப்பகுதி மக்கள் வழங்கிய இரகசியத் தகவலின் அடிப்படையில் அப்பாடசாலையில் கல்விகற்கும் க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களை அவர்களது வீட்டில் வைத்தே பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இவ் விசாரணையின் போது குறித்த வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்ததை அடுத்து அம்மாணவர்களின் பெற்றோர்கள் முன்னிலையில் பாடசாலைக் கட்டடத் தொகுதியை விரைவில் சீர்செய்து கொடுக்கும்படி கடுமையாக எச்சரித்து விடப்பட்டார்கள். (116)

# கிழக்கு மாகாண சபையில் புதிய அமைச்சர்கள் பதவியேற்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைக்கான அமைச்சர்கள் பதவியேற்றுள்ளனர். இதற்கான சத்தியப் பிரமாண வைபவம் நேற்று மதியம் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் இடம்பெற்றது.

இதன்போது கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர்களான தேசிய காங்கிரஸ் உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, சுதந்திரக் கட்சி உறுப்பினர் விமலவீர திசாநாயக்க ஆகியோர் தாம் முன்னர் வகித்த அமைச்சு பதவிகளுக்கு மீண்டும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

எம். எஸ். உதுமாலெவ்வை கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நிர்மாண, மின்சார, நீர் வழங்கல் அமைச்சராகவும், விமலவீர திஸாநாயக்க மீண்டும் கல்வி மற்றும் காணி அமைச்சராகவும் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். அதேவேளை முஸ்லிம் காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்ட அமைச்சுப் பதவிகளுக்கு ஹாபிஸ் நஸீர் அஹமட், எம்.ஐ.எம்.மன்சூர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

ஹாபிஸ் நஸீர் அஹமட் - விவசாய, நீர்ப்பாசன, கால்நடைகள் அமைச்சராகவும் எம்.ஐ.எம். மன்சூர் - சுகாதார, விளையாட்டு, தொழில்நுட்பக் கல்வி அமைச்சராகவும் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர். அதேவேளை முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் - நிதி திட்டமிடல் அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். இவ் வைபவத்தில் அமைச்சர்களான ரவூப்ஹக்கீம், அதாவுல்லா உட்பட சிரேஷ்ட அமைச்சர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# தொண்டைமானாறில் வழிப்பறி 20 இலட்சம் ரூபா அபேஸ்

இருபது இலட்சம் ரூபா பணத்துடன் ஆட்டோவில் சென்ற இளம் குடும்பஸ்தர் கடுமையாகத தாக்கப்பட்டு கொண்டு சென்ற பணம் கொள்ளையிடப்பட்டது.

நேற்று 11.30 மணியளவில் தொண்டைமானாற்றுச் சந்திப்பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் செல்வராசா ரவீந்திரன் (வயது-36) என்பவரே தலையில் காயத்துடன் அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட குறித்த இளைஞர் அச்சுவேலி இலந்தைக் காட்டுப் பகுதியில் 6 மாதங்களுக்கு முன் திருமணம் செய்துள்ளார். தான் வசிக்கும் வீட்டில் இருந்து இன்னொருவருக்குக் கொடுப்பதற்காக 20 இலட்சம் ரூபாவை ஆட்டோவில் எடுத்துக்கொண்டு சென்றுள்ளார்.

குறித்த நபரைப் பின்தொடர்ந்த இலக்கத் தகடு அற்ற மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் வழிமறித்து தலையில் தாக்கியதுடன் பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். காயமடைந்த குறித்த இளைஞரை அப்பகுதி பொதுமக்கள் அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். (116)

# புளியங்கூடலில் பரீட்சார்த்த விவசாயம் இன்று பயிற்சி ஆரம்பம்

(வேலணை)

மலைநாட்டில் விளைவிக்கப்பட்டு வருகின்ற மரக்கறி வகைகளையும், தீவகத்தைச் சேர்ந்த புளியங்கூடல் கிராமத்தில் விளைவிக்க முடியுமா என்ற பரீட்சார்த்தச் செய்முறைத் திட்டத்தினை மேற்கொள்வதற்கான திட்டமொன்றினை விவசாயத் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் புளியங்கூடல் கிராமத்தில் 22 விவசாயப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ள 22 பயனாளிகளுக்கும் இலவசமான மலைநாட்டு மரக்கறிப் பயிர் வகைகளினது விதைகள் என்பன விவசாயத் திணைக்களத்தினரால் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 22 விவசாயப் பயனாளிகளுக்குமான பயிற்சி நெறியும் தொழில்நுட்ப விளக்கங்களும் இன்று காலை வேலணை கமநல சேவைகள் நிலையத்தில் விவசாயப் போதனாசிரியர் செ.இராமநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த பலதரப்பட்ட தொழில் விற்பனர்கள் கலந்து கொண்டு விரிவுரையாற்றவுள்ளார்கள். (05)

# வீடுகள் கையளிப்பு

கிளிநொச்சி: திருமுருகண்டிப் பிரதேசத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட வீடுகளை மக்களுக்குக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

திருமுருகண்டிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கு இவ்வீடுகள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கலந்துகொண்டு மக்களுக்கு வீட்டின் திறப்பு மற்றும் சான்றிதழை வழங்கி வைத்தார்.

76 வீடுகள் மக்களுக்கு கையளிக்கப்பட்டதுடன், இதில் 57 ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர், இராணுவ அதிகாரிகள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி அமைப்பாளர் கீதாஞ்சலி ஆகியோர் கலந்து கொண்டனர். (35)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான ஒன்பதாவது (செப்ரெம்பர் மாத) மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

# மூடப்பட்டது நலன்புரி நிலையம்

(வவுனியா)

இறுதி யுத்தத்தின் போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வந்த மக்களைக் கடந்த 3 வருடங்களுக்கும் மேலாக தங்க வைக்கப்பட்டிருந்த செட்டிகுளம் மெனிக்பாம் நலன்புரி நிலையம் நேற்று உத்தியோகபூர்வமாக மூடப்பட்டது.

இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து வந்த நிலையில் தங்க வைக்கப்பட்டிருந்த இந் நலன்பரி நிலையமானது மக்களின் படிப்படியான மீள்குடியேற்றத்தின் பின்னர் தற்போது கேப்பாபிளவு மற்றும் மந்துவில் கிராமங்களைச் சேர்ந்த 261 குடும்ப அங்கத்தவர்களான சுமார் ஆயிரத்து 186 பேர் தங்கியிருந்த நிலையில் அவர்கள் அனைவரும் நேற்றுப் பேருந்துகளில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

ஐ.ஓ.எம் நிறுவனத்தின் உதவியுடன் மீள்குடியேற்றத்திற்காக செல்லும் இவர்களை வழியனுப்பும் நிகழ்வில் வன்னி கட்டளைத் தளபதி பெனிரஸ் பெரேரா உட்பட பல இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கொள்ளை சந்தேக நபர் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபர்கள் மூவரைத் தேடிப் பொலிஸார் வலை விரித்திருந்தனர். இதில் ஒரு சந்தேக நபர் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு மற்றைய இருவரையும் விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொள்ளைச் சம்பவம் யாழ். நகரப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (இ)

# கண்களில் படவில்லையா?

(உரும்பிராய்)



உரும்பிராய் கிழக்கு கத்தோலிக்கப் பாடசாலைக்கு அருகிலுள்ள வீதியில் சேதமடைந்து சரிந்த நிலையிலுள்ள மின் கம்பத்திற்குப் பதிலாக புதிய மின் கம்பம் மாற்றப்பட்டுப் பல மாதங்களாகியும் இது வரை அதன் இணைப்புக் கேபிள்கள் புதிய தூணுக்கு மாற்றப் படவில்லை. பழைய மின் கம்பம் சரிந்து விழும் நிலையில் இருப்பதால் மின் கேபிள்கள் தென்னை மரம், வேறு மரங்கள், வீடுகளோடு உரசிச் செல்வதால் மிகவும் ஆபத்தான நிலையிலுள்ளது.

இது தொடர்பாக மின்சார சபை அதிகாரிகளுடன் பலமுறை தொடர்பு கொண்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், சென்.மைக்கல் தேவாலயத்தினைச் சுற்றியுள்ள வீதியிலும் பல மின்கம்பங்கள் சேதமடைந்த நிலையிலுள்ளமையும் மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்குரிய நடவடிக்கையினை உடன் மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# அடையாள அட்டை எப்போது கிடைக்கும்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் நால்வருக்கு பதவியேற்று ஒரு வருடமாகியும் இதுவரை உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும்கட்சி உறுப்பினர்கள் 12 பேருக்கு இந்த அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் தமக்கு இவ் அடையாள அட்டை வழங்கப்பட்டமை குறித்து மாதாந்தக் கூட்டங்களில் வலியுறுத்தி வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவ் ஆளடையாள அட்டையை யார் வழங்குவது என்பது குறித்துக் குழப்பமாக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (104)

# அடையாள அட்டைக்கான நடமாடும் சேவை

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்களில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் இலவச நடமாடும் சேவை எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெறும் இந்நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் கொழும்பிலிருந்து வருகை தரும் ஆட்பதிவு திணைக்கள அதிகாரிகள் இதில் கலந்து கொண்டு விசாரணைகளை நடத்தி அவர்களுக்கு அடையாள அட்டையை உடனுக்குடன் வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர். (104)

# புதிய கட்டடத்தில் பால் காய்ச்சும் நிகழ்வு

(ஆனைக்கோட்டை)

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் புதிய கட்டடத்திற்கான பால் காய்ச்சும் நிகழ்வு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் நல்ல நாளில் அமைதியான முறையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வை அமைதியான முறையில் நடத்துவதற்குச் சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (104)



அரியாலை கிழக்குப் பகுதியிலுள்ள வயல் காணிகளுக்கு எல்லை பிரிப்பது தொடர்பாக ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அ.இரவீந்திரதாசன் தலைமையிலான குழுவினர் கமநல சேவைகள் ஆணையாளர் பற்றிக் நிறஞ்சனுடன் கலந்துரையாடுவதைக் காணலாம்.

# ஏகாதசி தீர்த்தம்

(அளவெட்டி)

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயனர் தேவஸ்தானத்தில் நாளை ஏகாத்சித் தீர்த்தம் பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9.00 மணிக்கு விசேட சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

பிற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டப் பூசையை அடுத்து ஸ்ரீமத் நாராயண சுவாமி ஸ்ரீதேவி, பூமாதேவி சகிதமாய் வீதியுலா எழுந்தருள்வார். மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசை நிகழும். (68)

# தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் இரதோற்சத்தை முன்னிட்டு இன்று காலை 10.30 மணிக்கு விசேட இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பாட்டு-திருமதி கனகாம்பிகை சிவனேஸ்வரநாதன், திருமதி மதுரா பரமேஸ்வரனும், வயலின் -அ.ஜெயராமன், மிருதங்கம் - சி.துரைராசா, முகர்சிங்க - எஸ். நந்தகுமார் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

# குறைந்த விலையில் மூக்குக் கண்ணாடி வழங்கல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சமூக சேவை அடிப்படையில் உற்பத்திச் செலவைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மூக்குக் கண்ணாடி விநியோகம் நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

குறித்த பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இச்செயற்பாட்டில் அதிசிறப்பு வாய்ந்த வைத்தியர்கள் மூலம் கண் பரிசோனை செய்யப்பட்ட கோல் பிறேம் வழக்கப்பட்டது. அத்துடன் தூரப்பார்வை கிட்டப் பார்வை குறைபாடுடையவர்களுக்கு கண்ணாடிகள் 650 ரூபாவுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது.

மேலும் எல்லாவகையான கண்ணாடி பிறேம், லென்ஸ் (வில்லை) என்பன பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன், பழைய கண்ணாடிகள் 50 வீத குறைந்த விலைக்கு திருத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

இச்செயற்பாட்டினால் இப்பகுதியில் உள்ள பலர் நன்மையடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (109)

# உலக சகோதரத்துவ விழா

சாவகச்சேரி வேம்பிராய் சத்திய ஞானக்கோட்டத்தின் உலக சகோதரத்துவ விழா எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இரமாலிங்க வள்ளலாரின் வருகையையொட்டி நடைபெறும் இவ்விழாவில் இந்தியாவில் இருந்து வருகை தரும் சாந்தி செல்வம் தம்பதிகளினால் கோட்டத்திற்கான ஒலிபெருக்கிச் சாதனங்கள் கையளிக்கப்படவுள்ளது.

தொடர்ந்து 6 நாட்களும் அகவல் பாராயணமும் ஆறு திருமுறைகள் ஓதப்படவுள்ளது (11)

# தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



2 ஆவது அகவையில்

பெயர் : க.சதுர்த்திகா

முகவரி : கண்ணபுரம் துறையூர், வேலணை

# வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திற்கு பல்வேறு திட்டங்களில் மின் விநியோகம்

(வடமராட்சி)

பருத்தித்துறை மின்சார சபையினால் வடமராட்சியின் கிழக்கு மருதங்கேணி, தாளையடி அடங்கலாக வடமராட்சியின் சகல பகுதிகளுக்கும் அரசாங்கத்தின் பல்வேறு திட்டத்தின் கீழ் வெகுவிரைவில் வீடுகளுக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளதாக மின்சாரசபை வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.


வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சார சபையில் அனுமதியளிக்கப்பட்டவர்கள் மற்றும் மின்சார சபையில் பணம் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொண்டவர்கள் ஆகியோருக்கு எதிர்வரும் முதலாம் திகதிக்குமுன் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது.

கடந்த காலத்தில் போதிய மின் இணைப்பீட்டுப் பொருட்களைப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது. குறிப்பாக வயர், மின்கம்பம், மின்மானிகள் போன்றவற்றுடன் மின் இணைபபுப் பொருட்களுக்கான உற்பத்தியும் குறைவாக இருந்தமையாலும் உரிய இடத்துக்கு உரியவர்களுக்கு மின்சாரம் வழங்க முடியவில்லை. வீடுகளுக்கு வழங்கவுள்ள மின் இணைப்புக்கள் மழை காலத்துக்கு முன்னதாக வழங்கப்படவுள்ளன.

இதில் ஒரு அலத்தை கம்பி மின்சார இணைப்புக்களில் 411-50-50-3610-2012-1460 போன்ற தொடர் இலக்கங்கள் அடிப்படையில், புதிய மின் இணைப்பு வழங்கப்படும்

இதில் சுமார் 400 குடும்பங்கள் பயனடையவுள்ளன. மேலும் வடமராட்சி கிழக்கு பகுதிகளுக்கு புதிய மின்மாற்றிகள் பொருத்தப்படவுள்ளன. இதனடிப்படையில் மணற்காட்டுச் சந்திப்பகுக்கு 160 கிலோவாற்றும், வலிக்கண்டிப் பகுதிக்கு 100 கிலோவாற்றும், மணற்காடு வடக்குப் பகுதிக்கு 160 கிலோவாற்றும் குடத்தனை வடக்குப்பகுதிக்கு 160 கிலோவாற்றும், குடத்தனைச் சந்திப்பகுதிக்கு 160 கிலோவாற்றும், பொற்பதிப்பகுதிக்கு 160 கிலோவாற்றும் அம்பன் வைத்தியசாலைக்கு அருகில் 100 கிலோவாற்றும், நாகர் கோவில் சந்திப்பகுதிக்கு 160 கிலோவாற்றும், மருதங்கேணிப்பகுதிக்கு 160 கிலோவாற் அளவுகளைக் கொண்ட அம்பியர் மின்மாற்றிகள் 3 அலத்தை மின்கம்பி இணைப்பாகவும் வழங்கப்படவுள்ளதுடன், மருதங்கேணிப் பகுதியில் மாத்திரம் லக்ஸபான மின்சாரமே இணைக்கப்படவுள்ளதாகவும் இதனால் அங்கு அடிக்கடி மின்தடை ஏற்படாது எனவும் மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (116)

## காத்தருளும் மாயவனே!



அலை ஓசை தாலாட்டும்
வல்லிபுரப் பதியதனில்
நிலைபெற்றுக் காத்தருளும்
நீல வண்ணா! மாயவனே!
அலைமகளாம் திருமகளின்
அருகிலுறை நாரணனே – எம்
நிலை கண்டும் அருளாது
நீள்துயில் கொள்வதும் ஏன்

- ரிசிகர் -

## நூலக கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை - புளியங்கூடலில் புதிதாக அமைக்கப்படவுள்ள பிரதேசசபை நூலக கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஊர்காவற்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் ஊர்காவற்துறை பிரதேச அமைப்பாளரும் பிரதேச சபைத் தவிசாளருமான ஜெயகாந்தன், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆசிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' சஞ்சிகையின் ஆவணி மாத மலர் வெளியிடப்பட்டுள்ளது.

இம்மலரில் உனக்கொரு உபதேசம், ஒரு சாண் வயிறு, வாழ்க்கையின் தத்துவம், மரணம் அப்புறம், திருவடி போற்றுவோம், கல்லெறி வாங்கிய கடவுள் உள்ளிட்ட பல ஆன்மிகத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## மதுப்பிரியர்கள் அட்டகாசம்; சிரமப்படும் மாணவர்கள்

(ஏழாலை)

ஏழாலைப்பகுதியில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் இரவு நேரங்களில் மாணவர்கள் கல்வி கற்கமுடியாமலும், பொதுமக்கள் நிம்மதியாக வீடுகளில் உறங்க முடியாமலும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மதுப்பிரியர்கள் குடித்துவிட்டு வீதிகளிலும், தமது வீடுகளிலும், ஏனைய பொது இடங்களிலும் நின்று சத்தமிடுவதாலும், தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதாலும் மாணவர்கள் உட்பட பொதுமக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் குடிபோதையில் அட்டகாசம் செய்பவர்களை யாரும் கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன்? என்று பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (148)

## வடமராட்சி வலயமட்ட ரீதியான விரைவு கணிதப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயமட்டத்தினால் வடமராட்சி ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற வலயமட்ட விரைவு கணிதம் மற்றும் திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

<u>விரைவு கணிதப்போட்டி</u>

தரம் 2

இ.அஜந் (யா/கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்), நா.கிஸ்ணமேனன் (யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), உ.கீர்த்தனி (யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), பொ.கிருஸ்ணராசா (யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்)

தரம் 3,

உ.காவ்யா (யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை), இ.யசோதா (யா/துன்னாலை வடக்கு மெ.மி.த.க.பாடசாலை), சொ.கோவர்த்தனி (யா/கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்), து.டெறிக்ஸபநேசன் (யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை), வ.அபிஷா (யா/வட இந்து ஆரம்பப்பாடசாலை),


தரம் 4,

பா.சாகித்தியா (யா.வட இந்து ஆரம்பப் பாடசாலை), நி.பிரியங்கா (யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), மு.சந்தோஷ் (யா/தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்), ச.சகிலா (யா/ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை), சி.சிவானுஜன் (யா.நெல்லியடி மெ.மி.த.க:பாடசாலை).

தரம் 5,

ர.சங்கவி (யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), கோ.தர்சிகா (யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்), சி.லதுஷா (யா/வட இந்து ஆரம்பப்பாடசாலை), இ.சுஜானி (யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), சி.சாத்விகா (யா.துன்னாலை வடக்கு மெ.மி.த.க. பாடசாலை).

(தொடரும்......) (109)



தென்மராட்சி பாடசாலை மாணவர்களில் பொருவிளையாட்டுப் போட்டியில் மாவட்ட மட்ட ரீதியில் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவான வீர, வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்மராட்சி கோட்டக்கல்விப்பணிப்பாளர் பு.சிவானந்தன் மங்கள விளக்கேற்றுவதனையும், வீரர் ஒருவருக்கு மாகாணக்கல்வித் திணைக்களத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.பிரெட்லி விருது வழங்கிக் கௌரவிப்பதனையும், வீர, வீராங்கனைகள் அமர்ந்திருப்பதனையும் காணலாம். (11)

நான் என்ற அகந்தையைப் போக்கி விடுவதுதான் அடக்கம் என்பதற்கு உண்மையான பொருள் - மகாத்மா காந்தி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## வாழ்வை நரகமாக்குதல் வேண்டாம்!

நமது சூழலிலோ நமது நாட்டிலோ மட்டும் என்றில்லை; மனிதர்கள் வாழும் இடங்களில் இருந்தெல்லாம் கொலை, பாலியல் வல்லுறவு, சிறுவர் மீது துஷ்பிரயோகம், போதைப் பாவனை வன்செயல் என்று குரூரமான செய்திகள் இப்போது அதிகம் கிடைக்கின்றன. இளைய மனங்களின் திரிபும் விரக்தியும் எதிர்காலம் குறித்து கவலை கொள்ள வைக்கின்றன.

புறச்சூழலின் குரூரத்தினால் சிதைக்கப்பட்டு, மனித மனங்களிலிருந்து அன்பு, கருணை, சக மனிதர்களிடமான நேசம், வாழ்வின் மீதான நம்பிக்கை என்பன இப்படித் தொலைந்து போவது குறித்துப் பதற்றமே உண்டாகிறது.

அன்பை உதறிவிட்டு மனதினுள் ஆழமான காழ்ப்புணர்வுகளை நிரப்பிக் கொள்கிறோமோ என்று அச்சப்படாமலிருக்க முடியவில்லை. அன்பையும் அடுத்தவரைச் சகிப்பதையும் தொலைத்துவிட்ட பின்னால் வாழ்வில் நம்பிக்கை கொள்ள மிச்சம் என்ன இருக்க முடியும்?

வாழ்க்கையின் மீது பிடிப்பும், எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையும்தானே இளமையின் சொத்து! தங்களின் ஈகோவுக்கு எந்த அடியும் விழாதபடி மாற்றங்களைத் தேர்ந்தெடுப்பதென்பது இளைஞர்களால் மட்டுமே முடிந்த காரியம் அல்லவா? எவ்வளவோ சாதிக்கவும், கற்றுக் கொள்ளவும் துடிப்புடனிருக்கும் இளைய பருவம் சிதைய அனுமதிப்பது இந்த சமூகத்தினுடைய குறைபாடுதான்.

விரக்தியும் வெறுப்பும் விரோதமுமான சூழலையே உருவாக்கித் தந்துகொண்டிருக்கும் சமூகப் பெரியவர்கள், ஊடகங்கள், மதப் பெரியவர்கள் எல்லோருமேதான் குற்றவாளிகள். இந்த சமூகம்தான் குற்றங்கள் செய்யவும் தூண்டி அதற்குத் தண்டனைகளையும் தந்து கொண்டிருக்கிறது.

வெறுப்புணர்வுகளை வளர்த்து விட்டுக் கொண்டிருப்பதுதான் இளைஞர்களைத் தவறான வழிகளுக்குத் தள்ளுகிறது. கஷ்டங்களைச் சொல்லி யார் யாரிடமோ அனுதாபம் வேண்டி அழுது கொண்டிருப்பதில் லாபமில்லை. நம்முடைய பிரச்சினைகளை நாம் சமாளிக்க விரும்பினால் நிறைவான அளவில் நம்பிக்கையும் உறுதியுமே தேவையாக இருக்கிறது.

நம்பிக்கையும் உறுதியோடும் சாதித்தவர்களை இளையோருக்குத் திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்தும் தேவை இருக்கிறது. இசைமேதை பீதோவன் சாகாவரம் பெற்ற ராகங்களை செவிடாக இருந்த நிலையில்தான் உருவாக்கினார். கவிஞர் மில்டன் 'இழந்த சொர்க்கம்' காவியத்தை கண்பார்வையற்ற நிலையில்தான் எழுதி முடித்தார். அலெக்ஸாண்டர் போப் உடல் ஊனமுற்றவர்; இருக்கையை விட்டு எழுந்து நடக்க முடியாதவர்; ஆங்கில இலக்கியத்தில் மிகப்பெரிய சாதனைகளை அவர்படைத்தார்.

ஜூலியஸ் சீஸர் காக்காய்வலிப்பு நோயினால் அவதிப்பட்டவர். காக்காய்வலிப்பு வரப்போகிறது என்ற உணர்ச்சி ஏற்பட்ட உடனேயே, போரை நடத்துவதற்கான யோசனைகளைச் சொல்லிவிட்டு, சுயநினைவு இழந்த நிலையில் படுத்து விடுவாராம். சுயநினைவு வந்தவுடன் எதுவுமே நடக்காதது போல தளபதி நிலையில் ஆணைகளைப் பிறப்பிப்பாராம். ஃபிராங்ளின் ரூஸ்வெல்ற் இளம்பிள்ளை வாதத்தால் கால் ஊனமுற்ற நிலையிலும் அமெரிக்க ஜனாதிபதி ஆனவர்.

ஹெலன் கெல்லர் பேச முடியாதவர்; பார்வையற்றவர்; காது கேளாதவர்! யாருடைய அனுதாபத்தையும் எதிர்பார்த்துக் காத்திருக்கவில்லை அவர். மற்றவர்களுக்கு உதவுவதில் தனது வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்று உறுதிபூண்டார். மனிதர்களுக்கு முன்மாதிரியானார்.

அனுதாபத்தை எதிர்பார்த்து அரற்றிக் கொண்டிருப்பதும், அடுத்தவர் மீது அசூயை கொள்வதும் மனதில் வன்முறை நிறைப்பதும், மற்றவர்களினது – நமது வாழ்வை வீம்புகளால் நரகமாக்கிக் கொள்வதற்கும் அல்ல நாம் பிறந்திருப்பது! வாழ்க்கை ஒரு கொடை! நாம் வாழவே பிறந்தோம்! - ஆசிரியர்

# தென்னை பயிர்ச்செய்கை அலுவலகத்தை திருமலைக்கு இடம்மாற்ற எதிர்ப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட தென்னைப் பயிர்ச்செய்கைக் காரியாலயமானது திருமலை மாவட்டத்திற்கு இணைக்கப்படவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட தென்னைப்பயிர்ச்செய்கைப் பயனாளிகள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மகஜர்களை கையளித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்னை வளத்தை அதிகமாகக் கொண்டுள்ள முல்லைத்தீவு மாவட்டமானது இயற்கை அனர்த்தங்களாலும், செயற்கை அனர்த்தங்களாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டமாகும். இங்கு மீள்குடியேறிய மக்களின் கிணறுகள், வேலிகள் போன்றன அழிவடைந்துள்ள நிலையில் தென்னம் பயிர்ச்செய்கையை மீண்டும் ஆரம்பிப்பதில் சில வாழ்வாதார கஷ்டங்களை தாம் எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

எனவே தமக்கான நிவாரணத்திட்டத்தை வழங்கவேண்டுமென இம்மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மூன்று வருடங்களுக்கு தொடர்நடவடிக்கையாகத் தமக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்ததுடன். நீர்ப்பாசன வசதிகளைப் பெறக்கூடிய உபகரணங்களையும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரியுள்ளனர்.

மேலும் யுத்தத்துக்கு முன்னர் இப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளான உரிமட்டை புதைப்பதற்கான மானியம் ஊடுபயிர்ச் செய்கை போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் மூன்று தொடக்கம் நான்கு வருடங்களில் பயன் தரும் தென்னங்கன்றுகளை வழங்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன துறைசார் அதிகாரிகளையும் பட்டதாரிகளையும் நியமித்து நிர்வாகங்களைப் பரவலாக்க வேண்டுமென்ற ஆலோசனையையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளதுடன் "நாம் பயிரிடுவோம் நாடடைக் கட்டியெழுப்புவோம்" என்ற ஜனாதிபதியின் கூற்றுக்கிணங்க மக்களை தமது வாழ்விடங்களில் தத்தமது கடமைகளைச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர ஒரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு சுயதொழில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதென்பது சாத்தியமற்றது எனவும் சம்பந்தப்பட்ட தரப்பினர் இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இறைச்சிக்கு மாடுகள் கடத்தல்; ஐவர் பொலிஸாரிடம் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

வளர்ப்பு மாடுகள் என்று கூறி போலி ஆவணங்களைக் காண்பித்து இறைச்சிக்காக மாடுகளைக் கடத்திச் சென்ற ஐந்து பேரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மீசாலைப்பகுதியிலிருந்து இம்மாடுகள் கடந்த வெள்ளிக்கிழமை இருபாலைப் பகுதிக்கு கடத்தப்பட்டபோது நல்லூரடிப் பகுதியில் பொலிஸார் இவர்களை மடக்கிப் பிடித்தனர்.

மாடுகள் வாங்கியதற்கான ஆவணங்களைப் பரிசோதித்த போது அவை போலியான ஆவணங்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டதுடன் ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர் என்பது பொலிஸ் விசாரணையின் போது தெரியவந்தது. 17 மாடுகள் இவ்வாறு கடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இம் மாடுகள் அனைத்தும் 2 வயதிற்கும் 8 வயதிற்கும் இடைப்பட்டவை, இறைச்சிக்காக கொல்லப்படும் மாடுகள் 12 வயதிற்கு மேற்பட்டவையாக இருக்க வேண்டும் என்பதால் இதில் சந்தேகம் கொண்ட பொலிஸார் ஆவணங்களைப் பரிசோதித்த போது இம்மாடுகளைக் கடத்தியவர்களில் ஒருவர் இறைச்சிக்கடை உரிமையாளர் என்பது தெரியவந்ததைத் தொடர்ந்து, இவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனா. (இ)

## வினைத்திறன் காண் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் நடத்தப்படவுள்ளதுடன் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக்கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

★ ★ ★

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் நிறைவேற்றுத்தர சேவை வகையின் III ஆம் வகுப்புக்கு (புள்ளிவிபரவியலாளர்) ஆட்சேர்ப்பு செய்தலுக்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடத்தப்படவுள்ளதுடன் போட்டிகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை தினமுரசு காரியாலயத்தில் பார்வையிட முடியும்.

## உரிய தரத்தில் மூக்குக் கண்ணாடிகள் சுகாதார அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

மூக்குக் கண்ணாடிகளை விநியோகிக்கும் சில நிலையங்கள் உரிய தரத்தில் அவை தயாரிக்கப்படுவதில்லை என சுகாதார அமைச்சின் இரசாயன சேவை பிரிவிற்கு பொறுப்பான பிரதிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி காமினி சமரசிங்க தெரிவித்தார்.

அவர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்து பொது மக்களிடமிருந்த பணத்தை அறவிடுவதாகவும் அவர் கூறினார். இந்த நிலைமையில் மூக்குக் கண்ணாடிகளின் தரத்திற்கு அமைய விலை நிர்ணயம் செய்யப்பட்ட வேண்டும் எனவும் கலாநிதி காமினி சமரசிங்க தெரிவித்தார். இது தொடர்பில் சட்டக் கொள்கையொன்றை வகுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நியமனம் வழங்கும் நிகழ்வு

(பருத்தித்துறை)

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் திறமையும் சேவை மூப்பு அடிப்படையிலும் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற நேர்முகப் பரீட்சை மூலம் 53 தமிழ், சிங்கள, முஸ்லிம் அதிகாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த தேர்தல்களினால் பிற்போடப்பட்டிருந்த நிலையில் இந்நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு நியமனங்களை வழங்கி வைக்கவுள்ளார். நியமனம் பெறும் அதிகாரிகளை தவறாது சமூகமளிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் கடிதமூலம் அறிவித்துள்ளார். நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வுக்கு வருகை தரும் அதிகாரிகளில் ஆண்கள் கறுப்பு நிற காற்சட்டையும் வெள்ளை நிறச் சேட்டும் கறுப்பு கழுத்துப் பட்டியும் அணிவதுடன் பெண்கள் இளம் நீலநிற சேலையும் அணிந்து வரவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (109)








# வெறுப்பு கொள்ளவைக்கும் பாதை

> **தீவில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்துவரும் நிலையில், இலங்கையை தன்னிடமிருந்து தள்ளிவிடும் எதையும் இந்தியா விரும்பவில்லை. புதுடில்லியின் கொள்கை வகுப்பாளர்களை அதிகம் கவலை கொள்ள வைப்பது சிறிய தமிழ் அமைப்புகளான, நாம் தமிழர் இயக்கம் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி போன்றவற்றின் ஆர்ப்பாட்டங்கள் அல்ல. தமிழ்நாட்டின் இரு பெரும் அரசியற் கட்சிகளான தி.மு.க. மற்றும் அ.இ.அ.தி.மு.க. என்பன இலங்கை எதிர்ப்பு உணர்வுகளுக்கு எப்படி உரமூட்டி வருகின்றன என்பதுதான்.**

ஓகஸ்ட் 13: தி.மு.க. அனுசரணையுடன் இலங்கையில் உள்ள சிறுபான்மை தமிழர்களுக்கு ஆதரவாக டெசோ மாநாடு சென்னையில் நடத்தப்பட்டது.

செப்ரெம்பர் 2:அ.இ.அ.தி.மு.க. தலைவியும் மாநில முதலமைச்சருமான ஜெயலலிதா இலங்கை உதைபந்தாட்டக் குழுவினரை தமிழ் நாட்டை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொண்டார்.

செப்ரெம்பர் 3: இலங்கை, அதன் பிரஜைகளை தமிழ் நாட்டுக்குச் செல்வதை தவிர்க்குமாறு பயண ஆலோசனை வெளியிட்டிருந்தது.

செப்ரெம்பர் 4: தமிழ் நாட்டிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு விஜயம் செய்த இலங்கை யாத்திரிகர்கள் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரால் கல் வீசப்பட்டது.

செப்ரெம்பர் 6: தமிழ்நாட்டில் இலங்கைப் பிரஜைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று புதுடில்லி இலங்கைக்கு உறுதி வழங்கியது.

பீதியால் தாக்கப்பட்ட இலங்கை யாத்திரிகர்கள், உடைத்து நொருக்கப்பட்டிருந்த யன்னல் கண்ணாடிகளையும் மற்றும் முன்கண்ணாடிகளையும் கொண்ட பேருந்து தொடரணியில் கடுமையான காவல் துறை கண்காணிப்புடன் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்காக திருச்சி விமான நிலையத்தை நோக்கி விரைந்தனர். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டுக்கு அயல் நாட்டினருடனான நல்லுறவுகளை வளர்ப்பதற்கும் மற்றும் நல்லெண்ணத்தை உறுதிப்படுத்துவதற்கும் இந்தச் சம்பவம் கடினமான ஒரு தோற்றத்தை வழங்குவதாகவே உள்ளது.

சிறிய தமிழ் அமைப்புகளான, நாம் தமிழர் இயக்கம் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி என்பனவற்றை சேர்ந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், இலங்கையில் உள்ள தமிழ் சிறுபான்மையினரின் இன்றைய நிலைமை காரணமாக ஆத்திரம் அடைந்துள்ளார்கள். ஆனால் முரண்பாடாக அவர்களின் கோபத்தின் முடிவை எதிர்கொள்பவர்கள் அவர்கள் தமது ஐக்கியத்தை வெளிக்காட்ட முயலும் அவர்களின் அதே சமூகத்தை சோந்தவர்கள்தான். ஏனெனில் அந்த யாத்திரிகர்களில் அநேகம்பேர் தமிழர்கள்.

"இது தமிழ்நாட்டில் உள்ள முற்றிலும் புலிகள் துணைக் குழுக்களின் ஆதரவாளர்களாலேயே நடத்தப்படுகிறது, தமிழ் புலிகளின் தோல்வியை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளவர்களால் மேற்கொள்ளப்படுகிறது", எனத் தெிவித்தார் இந்தியாவுக்கான இலங்கை தூதுவர், பிரசாத் காரியவசம். "அவர்கள் இலங்கையர்களின் நலன்கள், சொத்துகள் மற்றும் இந்த மாநிலத்தில் உள்ள இலங்கைப் பிரஜைகள் ஆகியோருக்கு எதிராக மீண்டும் குடியியல் கீழ்படியாமையை ஏற்படுத்துகிறார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார்.

புதுபுல்லியின் இராஜதந்திரிகளின் அலுவலகங்கள், இந்தச் சம்பவங்களால் ஏற்படப்போகும் எதிர்மறையான விளம்பரங்களால் இலங்கையுடனான இந்தியாவின் உறவுகளுக்கு ஏற்படப்போகும் பாதிப்புகளைப் பற்றி உணர்ந்துள்ளதால், இந்தியாவில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கொழும்புக்கு உறுதி வழங்குவதற்கு உடனடியாகவே விரைந்து நடவடிக்கை எடுத்துள்ளது. எனினும் புதுடில்லியின் கொள்கை வகுப்பாளர்களை அதிகம் கவலை கொள்ள வைப்பது இந்த ஆதரவுக் குழுக்களின் ஆர்ப்பாட்டங்கள் அல்ல, ஆனால் தமிழ்நாட்டின்இரு பெரும் அரசியற் கட்சிகளான தி.மு.க. மற்றும் அ.இ.அ.தி.மு.க. என்பன இலங்கை எதிர்ப்பு உணர்வுகளுக்கு எப்படி உரமூட்டி வருகின்றன என்பதுதான்.

கடந்த வாரம் தமிழ்நாட்டின் முதலமைச்சரும்அ.இ.அ.தி.மு.க.வின் தலைவியுமான ஜெ.ஜெயலலிதா, மாநிலத்துக்கு வருகை தந்திருந்த இலங்கை உதைபந்தாட்டக் குழு ஒன்றை, அவர்கள் அங்குள்ள உள்ளூர் குழு ஒன்றுடன் சிநேகபூர்வமான போட்டி ஒன்றை விளையாடிய பின்னர் அங்கிருந்து வெளியேற்றியுள்ளார். அதைத் தொடர்ந்து ஒரு கல்லூரிக் கால்பந்து அணியொன்றினையும் அவர்கள் தமிழ்நாட்டில் போட்டி எதிலும் விளையாடுவதற்கு முன்னரே அங்கிருந்து வெளியேற்றியுள்ளார். அவரது போட்டிக் கட்சியும், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி (யு.பி.ஏ) அரசாங்கத்தில் பங்கு வகிக்கும் கட்சியுமான தி.மு.க.வும் இலங்கை எதிர்ப்பு விடயத்தில்அவரைப்போலவே சமமான கடுமையுடனேயே நடந்து கொள்கிறது. தி.மு.க, இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதற்கு முடிவு கட்டும் விடயத்திற்கு மட்டும் தனது ஆதரவை வழங்கவில்லை. ஆனால் கொழும்பை பகிஷ்கரிப்பதற்காக ஏனைய கட்சிகள் மேற்கொள்ளும் முயற்சியையும் ஆதரிக்கின்றது. இலங்கைத் தமிழ் சிறுபான்மையினரின் தலைவிதி பாரம்பரிய காலமாக தமிழ் நாட்டில் அதிர்வலைகளை எற்படுத்தி வருகிறது. இந்த மாநில அரசியல்வாதிகள், கொழும்புக்கு எதிராகப் புலிகள் நடத்திய போரில் வருடக்கணக்காக அவர்களுக்கு பின்துணை வழங்கி வந்தார்கள். ஆனால் 1991 மே யில் புலிகள் ராஜீவ்காந்தியை கொலை செய்ததின் பின்னர் எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. ஒரு சில துணை குழுக்களைத் தவிர அனைவரும் புலிகளை மிக மோசமாக புறக்கணித்தார்கள், எந்தக் கட்சியும் அவர்களுக்கு பகிரங்கமாக ஆதரவு வழங்கவில்லை. 2009இல் நடைபெற்ற லோகசபைத் தேர்தல்கள் இதற்கு சாட்சியம் பகர்கின்றன, அப்போது புலிகளின் பழைய நண்பர்களான திமுக, காங்கிரஸ் தலைமையிலான யு.பி.ஏ யுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு தேர்தல் காரணமாக, புலிகளுக்கும் மற்றும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற மிக மோசமான இறுதிக்கட்டப் போரில் அவர்களைத் திரும்பிப் பார்க்க மறுத்துவிட்டார்கள்.

இந்த நிலைப்பாடு தொலைத் தொடர்புத் துறையில் நடைபெற்ற ஊழல் வெளியானதை தொடர்ந்து மாற்றமடைந்தது. அதில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உறவினர்கள் மற்றும் நெருங்கிய சகாக்கள் போன்றவர்கள் இருந்தார்கள். அது கட்சியின் மதிப்புக்கு களங்கம் ஏற்படுத்தியதுடன், கடந்த வருடம் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களிலும் அதன் தாக்கம் வேரோடியிருந்தது. காங்கிரஸுடனான தி.மு.க.வின் உறவு நியாயமான அரவணைப்பைப்பெறாமல், பரஸ்பரம் சம்பிரதாய பூர்வ வெளிப்பாட்டையே அடையாளப்படுத்தியது. அதனால் கருணாநிதி தனது பாரம்பரிய நிலைப்பாடான இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை என்பதை நோக்கித் தள்ளப்பட்டார்.

கடந்த மாதம் தி.மு.க.,சாகும் நிலையிலிருந்த தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்புக்கு(டெசோ) உயிரூட்டும் விதத்தில் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் ஆதரவாளர்களை மாநாடு ஒன்றுக்காக அழைத்திருந்தார். இலங்கைத் தமிழ் சிறுபான்மையினர், தங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் முயற்சிகளை தாங்களே எடுக்க அனுமதிக்கப்படவேண்டும் என்கிற தீர்மானம் அங்கு நிறைவேற்றப்பட்டு அதை வலியுறுத்தும் முகமாகப் பின்னர் அது ஐ.நா. சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினை ஒரு கையடக்கமான அரசியல் பிரச்சினையாக மாறி தன்னை ஓதுக்கித் தள்ளிவிடுவதை தடுப்பதை உறுதிப்படுத்தும் வகையில், தனது போட்டிக் கட்சியான தி.மு.க. வுடன் பொருந்தத்தக்க விதத்தில் ஜெயலலிதாவும் தனது பங்குக்கு இலங்கை எதிர்ப்பை உயர்த்திப் பிடித்து வருகிறார். "இரண்டு கட்சிகளாலும் தீமையான அரசியல் நடத்தப்பட்டு வருகிறது" என்று தமிழ் அரசியல் வர்ணனையாளரான ஞாநி குறிப்பிட்டுள்ளார். தி.மு.க.மற்றும் அ.இ.அ.தி.மு.க. என்பனவற்றின் கொள்கைகள் மாநிலத்தின் வலதுசாரி திருப்பத்தை ஊக்குவிக்கக்கூடும்.ஆனால் இலங்கையில் வாழும் தமிழர்களின் நலன்களை உறுதிப்படுத்தாது, என அவர் எண்ணுகிறார்.

"இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான கோபம் இருக்கலாம் ஆனால் அதற்காக சாதாரண இலங்கையர்களை இலக்கு வைக்கும் நோக்கம் எதைச் சாதிக்கப் போகிறது?அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அவர்களா பொறுப்பு? என்று ஞாநி மேலும் வாதிடுகிறார்.

உண்மையில் தமிழ்நாடு - இலங்கை உறவுகள் வலுவடைய வேண்டிய நேரத்தில், இலங்கை எதிர்ப்பு உணர்வுகளின் வளர்ச்சிக்கு கட்சிகளால் எண்ணெய் வார்க்கப்பட்டு ஊதிப் பெருப்பிக்கப்படுகிறது.

தமிழ் நாட்டில் இந்த விடயத்தில் ஏற்பட்டுவரும் வேகமான முன்னேற்றம் புதுடில்லியிலுள்ள வெளிவிவகார நிபுணர்களை பதற்றமடையச் செய்துள்ளது. ஐ.நா. மனித உரிமைச் சபையில் கொழும்புக்கு எதிரான இந்தியாவின் வாக்கு இருதரப்பு உறவுகளிடையே சற்று விகாரத்தை ஏற்படுத்தியுள்ளது.

தீவில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்துவரும் நிலையில், இலங்கையைத் தன்னிடமிருந்து தள்ளிவிடும் எதையும் இந்தியா விரும்பவில்லை. இந்த மாதத்தில் ராஜபக்ஷ இந்தியாவுக்கு மேற்கொள்ளும் விஜயத்தின்போது, இருதரப்பு உறவுகளையும் சீர் செய்ய இரு பகுதியினரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வார்கள் என புதுடில்லி நம்புகிறது. அந்த விடயம் வெற்றி பெறுவது, தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் நல்ல விதத்தில் நடந்து கொள்வதை பொறுத்தே உள்ளது. அவர்கள் அப்படி நடப்பார்களா?

**- அவுட் லுக்கில் பிரானே சர்மா கட்டுரையிலிருந்து**

# இந்திய -இலங்கை இடையேயான உறவு
# தமிழக எதிர்ப்பால் பாதிப்படையாது

## கருணாதிலக்க அமுனுகம தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழகத்தில் இடம்பெறும் இலங்கை தொடர்பான சிறு, சிறு விடயங்கள் காரணமாக, இரண்டு நாடுகளுக்குமிடையிலான நட்புறவில் எவ்விதமான விரிசலும் ஏற்படக் கூடாதென்பது தொடர்பாக இரண்டு தரப்பினரும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் இணக்கம் கண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயம் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. தென்னிந்தியாவின் சில பிரிவினரே எமது விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். அவை எமக்கு எந்தப்பாதிப்பையும் ஏற்படுத்த வில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை குழுவினரின் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயமானது சிறந்த முறையில் வெற்றிகரமாக அமைந்தது என்று குறிப்பிடலாம்.

குறிப்பாக ஜனாதிபதிக்கும் இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கிற்கும் இடையிலான சந் திப்பு விசேடமானதாகும். இதன் போது பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டன.

மேலும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் தேசிய நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பிலும் இந்தியப் பிரதமர் கேட்டறிந்துகொண்டதுடன, திருப்தியையும் வெளியிட்டுள்ளார்.

மேலும் அண்மையில் நடந்து முடிந்த கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தலில் ஆளும் கட்சி வெற்றிபெற்றமை தொடர்பிலும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மகிழ்ச்சி வெளியிட்டார்.

அந்த வகையில் பார்க்கும் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயமானது வெற்றிகரமானது என்று கூற வேண்டும்.

இதேவேளை எமது விஜயத்துக்கு எதிர்ப்புத்தெரிவித்து தென்னிந்தியாவில் சில நகர்வுகள் எடுக கப்பட்டுள்ளது.

மாறாக ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் விஜயம் செய்த பகுதியில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை.

அத்துடன் அவ்வாறான செயற்பாடுகள் எமக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

ஆர்ப்பாட்டம் செய்தவர்களை தடுப்பதற்குத் தேவையான அனைத்து திருப்திகரமான நடவடிக்கைகளையும் இந்திய மத்திய அரசாங்கம் எடுத்திருந்தது என்றார்.

# இரண்டு இலட்சம் பேருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2011ஆம் வருட புள்ளி விபர அறிக்கையின்படி கடந்தவருடம் 2 இலட்சத்து 62,960 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ளனர்.

இவர்களில் 1,27,090 பேர் பெண்களாவர். 1,35,670 பேர் ஆண்களாவர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு பிரதி முகாமையாளர் ஏ.கே.யூ.ரோஹன தெரிவித்தார்.

சவூதி அரேபியா, குவைத், கட்டார், லெபனான் ஓமான், பஹ்ரைன், சைப்ரஸ், தென்கொரியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு இராஜ்யம் ஆகிய நாடுகளுக்கே இலங்கையர் இவ்வாறு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ளனர்.

தொழில்சார் துறையைப் பொறுத்தவரையில் கணக்காளர், பொறியியலாளர், கடற்படைப் பொறியியலாளர், தகவல் தொழில்நுட்பம் போன்ற உயர் மட்டத்துறையிலும் மின்சார திருத்த வேலைகள், தாதிமார் மற்றும் உதவியாளர் போன்ற மத்திய தர வேலைகளுக்கும் குறித்த நாடுகளில் போதிய வேலைவாய்ப்புகள் இருப்பதாக பிரதி முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

# இராணுவத்திலிருந்து தப்பியோடிய 35 ஆயிரம் பேர் கைதாகினர்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து இதுவரையில் 65 ஆயிரம் இராணுவ வீரர்கள் தப்பியோடியுள்ளதுடன்,அவர்களில் 35 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

இவ்வாறு தப்பியோடிவர்களில் மாதம் ஒன்றிற்கு 400 தொடக்கம் 500 பேர் வரை கைது செய்யப்படுவதாகவும், அவர்களில் வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபடாதவர்கள் இராணுவத்திலிருந்து சட்ட ரீதியாக விலகிச் செல்ல அனுமதிக்கப்படுவதுடன், ஏனையோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையிலான காலப்பகுதியிலேயே மேற்படி 35 ஆயிரம் இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் அநேகமானோர் சட்ட ரீதியாக சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளதுடன், சிலர் தொடர்ந்தும் இருக்கின்றனர்.

இவ்வருட ஜனவரி மாதம் முதல் இதுவரையிலான காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்ட இராணுவ வீரர்களில் வேறு குற்றச் செயல்களில் ஈடுபடாத 12600 பேர், சட்ட ரீதியாக இராணுவத்திலிருந்து தண்டனைகளின்றி விலகிச் செல்ல அனுமதிக்கப்படுவதுடன், வேறு பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பன்றிகளுக்கு வழங்கப்பட்ட மில்கோ நிறுவன பால்

அரசாங்க பால் உற்பத்தி நிறுவனமான 'மில்கோ' தமது அம்பேவெல பண்ணையில் இருந்து பாவனைக்கு உகந்த சுமார் 10 லீற்றர் பாலை, மஹாபெரிதன்ன விலங்குப் பண்ணைக்கு வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நுகர்வுக்கு பால் தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலையில், இந்தப் பால் மஹாபெரிதன்ன பண்ணையில் வளர்க்கப்படும் பன்றிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மில்கோ நிறுவனம், தூய்மையான பாலை பதப்படுத்தி வைப்பதற்காக NA2O2 என்ற நைட்ஜரன் பெரேசைட்டை பயன்படுத்தி வருகிறது. இது உலக சுகாதார ஸ்தாபனத்தின் நியமங்களுக்கு அமைய குற்றமாகக் கருதப்படுகிறது. மில்கோ நிறுவனம் கடந்த ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் அம்பேவெலயில் உள்ள பாரிய குழிகளில் சுமார் 538 ஆயிரம் லீற்றர் பாலை ஊற்றி மூடிய சம்பவமும் இடம்பெற்றுள்ளது. இது மனித பாவனைக்கு உதவாத பால் என்று மில்கோ நிறுவனம் இதன்போது தெரிவித்திருந்தது.

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 23,521 சாரதிகள் இவ்வருடம் கைது

(கொழும்பு)

2012 - 09 - 11ஆம் திகதி தொடககம் நேற்று முன்தினம் காலை 6 மணி வரையிலான காலப் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 2048 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் பயணிகள் பேருந்து சாரதிகள் 15பேரும் அடங்குவர்.

இதேவேளை, 2012-01-01ஆம் திகதி தொடக்கம் நேற்றுமுன் தினம் வரை மதுபோதையில் வாகனம் செலுத்திய 23,521 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 11,085 சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரம் தற காலிகமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளதென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

மேலும் 45 சாரதிகளின் அனுமதிப் பத்திரங்கள் நிரந்தரமாக இரத்து செய்யப்பட்டுள்ளன.

மதுபோதையில் வாகனம் செலுத்தி பொலிஸாரிடம் அகப்பட்டு வழக்குத் தாக்கல் செய்து குற்றம் நிரூபிக்கப்பட்டால் மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டம் 151ஆவது அத்தியாயத்தின் 216ஆவது சரத்தின்படி பின்வரும் தண்டனைகள் வழங்கப் படும்.

மதுபோதையில் வாகனம் செலுத்தல்:- 2000 ரூபா அபராதம், 3 மாத சிறைத் தண்டனை, ஒரு வருடத்திற்கான சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து.

மதுபோதையில் பயணிகள் வாகனம் செலுத்துதல்:- 3000 ரூபா அபராதம், 6 மாத சிறை, சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து.

மதுபோதையில் வாகனம் செலுத்தி ஒருவருக்கு காயம் ஏற்படுத்தல்: 5000 ரூபா அபராதம், 5 வருட சிறை, சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து.

மதுபோதையில் வாகனம் செலுத்தி ஒருவருக்கு உயிர்ச் சேதம் ஏற்படுத்தல்: 10 வருட சிறை, சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து.

மேலும் மதுபோதையில் வாகனம் செலுத்தினால் வாகனத்தின் உரிமையாளர் மீதும் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளும் உண்டு.

# தமிழ், சிங்கள மொழிகளில் பேருந்து பெயர்ப்பலகை

இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை ஆகியவற்றுக்கு சொந்தமான அனைத்து பயணிகள் பேருந்துகளிலும் தமிழ் மற்றும் சிங்களமொழிகளில் பெயர்ப்பலகை உள்ளிட்ட விடயங்கள் இருக்க வேண்டியது கட்டாயம் என தேசிய ஒருமைப்பாடு மற்றும் அரசமொழிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது இலங்கை அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சட்ட ரீதியான தேவை எனவும் அமைச்சு கூறியுள்ளது. பல பேருந்துகள் இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், சட்டத்தைச் செயற்படுத்த பேருந்துகள்மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இந்தச் சட்டத்தை அமுல்படுத்தா சாரதிகளுக்கு எதிராக 6 மாத சிறைத்தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை அகதிகளின் மனநிலை பாதிப்பு



நவுரு மற்றும் மனுஸ் தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலியாவின் எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. கிறீன்ஸ் கட்சியின் குடிவரவுத்துறை பேச்சாளர் சாரா ஹன்சன் இதனைத் தெரிவித்துள்ளார். இந்தத் தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு முறையான மனவள ஆலோசனை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள அவுஸ்ரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் கிறிஸ் போவன், இந்த முகாமைச் சேர்ந்தவர்களுக்கு மனவள ஆலோசனையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

# நீதித்துறைமீது தலையீடு; சட்டத்தரணிகள் கண்டனம்

(கொழும்பு)

நீதிச்சேவை ஆணைக்குழுமீதான தலையீடுகளைக் கண்டித்து, இலங்கை சட்டத்தரணிகள் சங்கமானது இரு தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளதாக சங்கத்தின் தலைவர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சங்கத்தின் கூட்டத்தில் ஏகமனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இவ்விடயம் தொடர்பில் முதற்கட்டமாக, பிரதம நீதியரசரை சட்டத்தரணிகள் சங்கம் சந்திக்கவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் சஞ்சய கமகே தெரிவித்துள்ளார்.

நீதித்துறையின் சுயாதீனத்தை நிலைநிறுத்துவதற்கு நாட்டின் அனைத்து நீதிபதிகளினதும் அர்ப்பணிப்புக்காக அவர்களுடனான ஒற்றுமையை வெளிப்படுத்தும் முகமாக இத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக அவர் கூறினார்.

அரச ஊடக நிறுவனங்கள் இரண்டிற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான சாத்தியம் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி உட்பட சிரேஷ்ட சட்டத்தரணிகள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதென மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# குடத்தனை வீதி புனரமைக்கப்படுமா?

(வரணி)

வரணிச் சந்தியிலிருந்து மாசேரி ஊடாக குடத்தனைக்குச் செல்லும் வீதி கடந்த வருடம் சுமார் ஒரு கிலோ மீற்றர தூரம் வரை திருத்தம் செய்யப்பட்டது.

இன்னும் ஒரு கிலோமீற்றர் தூரம் வரை புனரமைப்பு வேலைகள் செய்யாததால் பயணிகளும், வாகனங்களும் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் இனிவரும் பருவ மழையுடன் இவ்வீதியால் வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்படும். கடந்த வருடமும் மழைகாலத்தில் முள்ளி - வல்லிபுர ஆழ்வார் வீதியால் பயணத்தை மேற்கொண்டனர்.

துவிச்சக்கரவண்டிப் பயணிகள் தமது வண்டிகளைத் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டிய நிலையும் காணப்படுகிறது.

இவ்வீதி வரணி - கறுக்காய் - மாசேரி மக்களுக்கு குடத்தனைக்குச் செல்லும் வீதி என்பதும், குடத்தனை மக்களும் குறித்த பிரதேசத்திற்கு செல்லும் வீதியாக காணப்படுவதால் உரியவர்கள் கவனமெடுத்து மீதி வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (150)

# முகாமைத்துவ செயற்பாடுகளுடன் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையம் பொதுமக்களுக்கு இலகுவான சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏதுவாக முகாமைத்துவ செயற்பாடுகளுடன் இயங்கி வருவதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல ஆண்டு காலமாக பல்வேறு சிரமங்கள் மத்தியிலும் ஒன்றாக இயங்கி வந்த போக்குவரத்துப்பிரிவு, குற்றத்தடுப்புப் பிரிவு, முறைப்பாட்டுப் பிரிவு, பரிபாலனப் பிரிவு, பெண்கள் பிரிவு மற்றும் சிறுவர் முறைப்பாட்டுப் பிரிவு, மக்கள் தொடர்பாடல் பிரிவு, சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பிரிவு, போன்ற பிரிவுகள தற்போது தனித்தனியாக இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் பொலிஸ் சேவையை நாடி வரும் பொது மக்களுக்கென சரளமாக தமிழிலும், சிங்களத்திலும் பேசக் கூடிய வரவேற்பாளர் ஒருவரையும் நியமித்துள்ளதாகவும். அவர் பொலிஸ் சீருடை அணியாது சாதாரண உடையில் சேவைக்காக அமர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளிலும் மாணவர்களின் நலன் கருதி முறைப்பாட்டுப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. சுமார் 17 பாடசாலைகளுக்கு வைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டு பெட்டிகள் பாடசாலை மாணவா களுக்கு கற்றலுக்கு தடையை ஏற்படுத்தும் வெளிநபர்களால் ஏற்படும் பிரச்சினை, வீட்டில் ஏற்படும் குடும்பப்பிரச்சினைகளால் ஏற்படும் மன உளைச்சல், சிறுவர் மீதான பாலியல் வல்லுறவுகள் போன்ற பல்வேறு சம்பவங்கள் வெளிக் கொணரமுடியாத சந்தர்ப்பத்தில் இரகசியமான முறையில் மாணவர் சமூகங்கள் தமது உள்ளாந்த பிரச்சினைகளைத் தெளிவூாக் எழுதி முறைப்பாட்டுப் பெட்டிக்குள் இடமுடியும். அத்துடன் இம்முறைப்பாடுகளைப் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிட்டு பின் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (116)

## மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் கைது

(கிளிநொச்சி)

மாங்குளம் - பனிக்கன்குளம் பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த 23 பேர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து எட்டு கியூப் மணல் மற்றும் 11 உழவு இயந்திரங்கள் என்பன பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.


# கடும் வறட்சியினால் பால் உற்பத்தி பாதிப்பு

(துணுக்காய்)

துணுக்காய், மல்லாவிப் பகுதி பாடசாலை மாணவர்களுக்குப் பால் வழங்குவதில் பாற்சபை பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடும் வறட்சி நிலவுவதால் பண்ணையாளர்களும், மாடு வளர்ப்போரும் குறைந்தளவு பாலையே பால்சாலைக்கு வழங்கி வருவதாகவும் உரிய அளவு பால் சேராததால் எல்லாப் பாடசாலைகளுக்கும் தினமும் பாலினை வழங்கமுடியாதுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஒன்றுவிட்ட ஒரு நாளிற்கே பாடசாலைக்கு பாலினை வழங்கி வருவதாகவும், இதனால் மாணவர்களும் உரிய முறையில் தினமும் பாலினைப் பெறமுடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். (148)



கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் எழுதிய "பொன்னும் மணியும்" நூல் அறிமுகவிழா கடந்த வெள்ளிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது, யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி நூலை வெளியீட்டு வைப்பதைக் காணலாம்.

## வன்னிவிளாங்குளத்தில் பாலங்கள் அமைப்பு

(கிளிநொச்சி)

மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதிப்புனரமைப்புப் பணியில் வன்னிவிளாங்குளப் பகுதியில் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குள் ஏழு பாலங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம் எதிர்காலத்தில் இப்பகுதி விவசாயிகள் நன்மையடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மாங்குளம் சந்திப்பகுதியில் இருந்து மூன்றுமுறிப்பு - வன்னிவிளாங்குளம் வரையான பகுதி பலகாலமாக கிரவல் வீதியாக இருந்த நிலையில் தற்போது காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்டு வருகிறது. (148)

## ஆன்மீக சொற்பொழிவு

(வவுனியா)

வவுனியா - கோவில்குளம் அருள் மிகு ஸ்ரீதேவி சமேத ஸ்ரீ மகா விஷ்ணு தேவஸ்தான முதலாவது பிரம்மோற்சவப் பெருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருவதையொட்டி ஆன்மீக சொற்பொழிவும் இடம்பெற்று வருகின்றது.

பத்துநாட்களைக் கொண்டமைந்த இத் திருவிழாவில் 'ஸ்ரீ மஹா விஷ்ணுவின் தசாவதாரங்கள்' எனும் பொருள் பற்றி சொல்வேந்தன் எஸ்.எஸ். வாஸன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றி வருகின்றார். (160)

# பற்றிகளைத் திருடியவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொடிகாமம் பகுதியில் உள்ள எயாரெல் கோபுரத்தில் இருந்து 20 பற்றிகளைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரினால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டதுடன், திருடப்பட்டதாகக் கூறப்படும் 20 பற்றிகளும் அவரிடம் இருந்து மீட்கப்பட்டன.

எயாரெல் நிறுவனத்திற்குச் சொந்தமான இந்தக் கோபுரத்தில் பொருத்தப்பட்டு இருந்த சுமார் 20,000 ரூபா பெறுமதியான பற்றிகள் கடந்த வியாழக்கிழமை திருட்டுப்போயுள்ளதாக நிறுவன முகாமையாளர் கொடிகாமம் பொலிஸ் நில்லயத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து விசாரணையை மேற்கொண்ட கொடிகாமம பொலிஸார், திருடப்பட்டதாகக் கூறப்படும் பற்றிகளுடன் சந்தேக நபரைக் கைதுசெய்ததாக தெரிவித்துள்ளனர்.

# முரசின் இன்றைய பலன்

(25.09.2012 - செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 09 ஆம் திகதி.
நட்சத்திரம் உத்தராடம் பிற்பகல் 3.01 வரை.
திதி தசமி. முற்பகல் 11.43 வரை. பின்னர் ஏகாதசி.
இராகுகாலம் 3.02 - 4.32 வரை. சுபநேரம் 10.32 - 12.02 வரை.
எமகண்டம் 9.02 - 10.32 வரை, குளிகன் காலம் 12.02 - 1.32 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிறருக்கு உதவுவதிலும் நற்செயல்களிலும் ஈடுபடுவீர்கள். தான தர்மம் செய்ய பணவசதி துணை நிற்கும். தொழிலில் இலக்கு நிறைவேறும். |
| ரிஷபம் | எதிர்பார்த்த வெற்றிகள் கிடைக்கும். உறவினர், நண்பர் பாராட்டு. தொழிலில் போட்டி குறையும். பணவரவு திருப்தி. நீண்டநாள் விவகாரத்தில் சாதக தீர்வு. |
| மிதுனம் | மனம் தெளிந்த நீரோடை. பழையவற்றை அசைபோடுவீர்கள். தொழில்வளர அனுகூலம். குடும்பத்தின் தேவை பூர்த்தி அடையும். ஓய்வைக் கழிக்க சுற்றுலா. |
| கடகம் | புதிய முயற்சியில் இறங்குவீர்கள். செலவு இருக்கும். கூடுதல் உழைப்பினால் மட்டுமே தொழில் வளர்ச்சி. உழைப்புக்கு திருப்தியான பலன். வாகன செலவு. |
| சிம்மம் | ஆடம்பர எண்ணம். அவசியமற்ற பணச்செலவு. நண்பர்களுக்கு உதவி. தொழில் பழப்பழயாக வளரும். பணவரவு தாமதம். புகழுக்குரியன செய்வீர்கள். பெருமை. |
| கன்னி | விளையாட்டுக்குணம். தொழிலில் அனுகூலத்தைப் பயன்படுத்தலாம்.. பணவரவு குறிப்பிட்ட அளவில். உறவினர் வகையில் உதவி. குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| துலாம் | எதிர்மறை என்று நினைத்தது நேர்மறையாக மாறும். தொழில் அபிவிருத்தி. கூடுதல் மூலதனம். தாராள பணவரவு. பொருள் வாங்குவீர்கள். புத்திரருக்கு பாராட்டு. |
| விருச்சிகம் | எண்ணத்திலும், செயலிலும் புதிய உத்வேகம். நினைத்த செயல் நிறைவேறும். தொழில் அனுகூலம். தாராள வளர்ச்சி. குடும்பத் தேவை பெரிதும் பூர்த்தி. |
| தனுசு | முன்யோசனையுடன் செயற்படுவீர்கள். நலன் விரும்பிகளின் உதவி கிடைக்கும். அதிகநேரம் பணிபுரிய நேரிடும். முக்கிய செலவு இருக்கும். |
| மகரம் | சுய திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். பகையிடம் விலகுவது நல்லது. தொழிலில் குளறுபடி சரிசெய்ய நேரும். வரவுக்கு ஏற்ப செலவுகள். |
| கும்பம் | அதிகவேலை. திட்டமுடன் செயற்பட்டால் நன்மை. தொழிலில் மாற்றங்கள். வரவை விட கூடுதல் செலவினம். உடல்நலத்தில் கவனம் அவசியம். |
| மீனம் | பழைய நண்பரை சந்திப்பீர்கள். மனதில் கூடுதல் நம்பிக்கை. தொழிலில் மாற்றம் இருக்கும். உபரி வருமானமும் கிடைக்கும். குடும்பத்தில் கூடுதல் மகிழ்ச்சி. |

# தேசிய மட்ட பெண்கள் மென்பந்து சுழிபுரம் விக்ரோறியா 2ஆம் இடம்




(வாதுவவில்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெண்கள் மென்பந்துப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் முதல் நேற்று வரை வாதுவவில் நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

முன்னதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியும், மட்டக்களப்பு மகாஜனா வித்தியாலய அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி வெற்றிபெற்று முதலில் ஆடிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட ஆறு ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரஜீதா 20, பானுப்பிரியா எட்டு ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 36 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மட்டக்களப்பு மகாஜனா வித்தியாலய அணி ஆறு ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றது. இதன் போட்டி சமநிலையானது. இதன் காரணமாக சூப்பர் ஓவர் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் முதலில் ஆடிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி சூப்பர் ஓவரில் 14 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுகன்யா 10 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு 15 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மட்டக்களப்பு மகாஜனா வித்தியாலய அணி 10 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.

தொடர்ந்து நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியும், இரத்தினபுர சுமண பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இரத்தினபுர சுமண பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோபிகை 12, பிரணாவி ஏழு, பானுப்பிரியா, சுகன்ஜா தலா ஐந்து ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு 31 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் கறமிறங்கிய இரத்தினபுர சுமண பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 4.3 ஓவர்கள் நிலையில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்து சம்பியன் பட்டத்தை வென்றது.

இறுதிப் போட்டி ஐந்து ஓவர்கள் கொண்டதாகவும், மற்றைய ஏனைய போட்டிகள் ஆறு ஓவர் கொண்ட போட்டியாகவும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (12, 93)

## இன்றைய ஆட்டம்


ICC WORLD TWENTY20 SRI LANKA 2012

பாகிஸ்தான்-பங்களாதேஷ்

பல்லேகல மாலை 7.30 மணி



## கொரிய ஓப்பன்; வோஸ்னியாக்கி சம்பியன்



(சியோல்)

கொரிய ஓப்பன் ரென்னிஸ் பட்டத்தை டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி கைப்பற்றிக் கொண்டார். கொரிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் உலகின் முன்னாள் முதல்நிலை வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, மூன்றாம்நிலை வீராங்கனையான எஸ்தோனியாவின் கையா கனேபியை எதிர்கொண்டார். 90 நிமிடங்கள் மட்டுமே நீடித்த இப்போட்டியில் முழுவதுமாக ஆதிக்கம் செலுத்திய வொஸ்னியாக்கி 6-1, 6-0 என்ற நேர் செட்களில் கனேபியை வீழ்த்தி கொரிய ஓபன் சம்பியன் பட்டம் வென்றார். முன்னதாக அரையிறுதிப் போட்டியில் ரஷ்யாவின் எகடெரினா மகரோவாவை, வோஸ்னியாக்கி வீழ்த்தியிருந்தார். வோஸ்னியாக்கி வென்றுள்ள 19ஆவது சர்வதேச பட்டம் இதுவாகும்.

## அம்மாவுக்கு அர்ப்பணம்

(கொழும்பு)

இங்கிலாந்து அணிக்கெதிராகப் பெற்ற ஆட்டநாயகன் விருதை எனது அம்மாவுக்கு அர்ப்பணிக்கின்றேன் என சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் தெரிவித்தார்.

கடந்த ஒரு ஆண்டு காலமாக இந்திய அணியில் இடம் பெறாமல் தவித்தேன். இந்த நேரத்தில் நான் அடைந்த துன்பம் மிகப் பெரியது. இருப்பினும், இந்த நேரத்தில் எனக்கு ஆதரவாக இருந்தவர் எனது அம்மாவே. அம்மா அடிக்கடி கூறுவார் நீ மீண்டும் இந்திய அணியில் இடம்பிடிப்பாய் சாதிப்பாய் என்று. அது நடந்து விட்டது. எனவே, இந்த ஆட்டநாயகன் விருதை அம்மாவுக்கு அர்ப்பணிக்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஷங்காய் ரக்பி தொடரை கைப்பற்றியது இலங்கை

சீனாவில் நடைபெறும் அணிக்கு எழுவர் கொண்ட ஷங்காய் ரக்பி தொடரின் முதலாவது சம்பியன் பட்டத்தை இலங்கை அணி பெற்றுகொண்டுள்ளது. தாய்லாந்து அணியை 22 - 7 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்து இலங்கை சம்பியன் பட்டத்தை வெற்றிக்கொண்டுள்ளதாக இலங்கை ரக்பி சங்கத்தின் செயலாளர் றிஸ்லி இலியாஸ் தெரிவித்துள்ளார். முதல்சுற்றில் இலங்கை அணி 17கோல்களையும் தாய்லாந்து அணி 7 கோல்களையும் பெற்றுக் கொண்டன. இரண்டாவது சுற்றில் இலங்கை 5 கோல்களைப் பெற தாய்லாந்தினால் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை.

## சச்சின் வீட்டில் லாரா



(மும்பை)

சச்சின் டெண்டுல்கரை அவருடைய வீட்டில் சந்தித்துப் பேசினார் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் பிரையன் லாரா.

இந்தத் தகவலை சச்சின் ஃபேஸ்புக் மற்றும் டுவிட்டரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலையில் தெரிவித்துள்ளார். இருவரும் சேர்ந்து எடுத்த புகைப் படங்களையும் வெளியிட்டுள்ளார்.

எனது வீட்டில் இருப்பவர் யார் என்று கண்டுபிடியுங்கள். மிகச்சிறந்த வீரர், அற்புதமான நண்பர் என்று லாரா குறித்து சச்சின் வர்ணித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் சச்சினும், லாராவும் சமகாலத்தவர்கள் என்பதும், இருவரும் சிறந்த நண்பர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சச்சின் ஓய்வுபெற வேண்டும் என்று பல்வேறு தரப்பினர் கூறி வரும் நிலையில், சச்சின் மேலும் இரண்டு ஆண்டுகள் விளையாடலாம். சிறப்புமிக்க வீரரான அவர் ஓய்வுபெறும் தருணம், கிரிக்கெட் உலகிற்கு பேரிழப்பாக அமையும் என்று லாரா கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## கடினமான முடிவாக அமைந்தது சிரேஷ்ட வீரர்களுக்கு ஓய்வு

(கொழும்பு)

சிரேஷ்ட வீரர்களுக்கு ஓய்வு அளித்தது கடினமானமுடிவே. ஆனால் சகல வீரர்களும் ஒத்துழைப்பு அளித்தமையாலேயே இங்கிலாந்து அணிக்கெதிரான ஆட்டத்தில் சிறப்பான வெற்றியைப் பதிவாக்கிக்கொள்ள முடிந்தது என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்தார்.

சுழற்பந்து வீரர்கள் மிகவும் சிறப்பாக வீசி வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தனர். குறிப்பாக ஹர்பஜன்சிங் பந்துவீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு நன்றாக வீசினார்.

இந்திய அணியின் சிறந்த சுழற்பந்து வீரர் அஸ்வினுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது. அவருக்குப் பதிலாக இடம்பெற்ற ஹர்பஜனும், சாவ்லாவும் நன்றாக பந்து வீசினார்கள். இதே போல ரோகித்சர்மா, கம்பீர் ஆகியோரது துடுப்பாட்டம் அபாரமாக இருந்தது.

ஆடுகளத்துக்கு தகுந்தவாறு ரோகித் சர்மாவை யுவராஜ் சிங்குக்கு முன்னதாக களம் இறக்கினோம். ஹர்பஜன்சிங்கும், பியூஸ் சாவ்லாவும் சிறப்பாக பந்து வீசியதால், இனி வரும் போட்டிகளில் 11 வீரர்களை தேர்வு செய்வதில் பல பிரச்சினைகள் தற்போது ஏற்பட்டுள்ளது. கடுமையான முடிவே என்றாலும் சிறந்த அணியைத் தேர்வு செய்வோம். அதன் மூலம் சிறப்பான வெற்றிகளைப் பதிவாக்கிக் கொள்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# டொனால்ட் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் யாழ். சென்றலைட்ஸ்



(யாழ்ப்பாணம்)

டொனாட்ல் வெற்றிக் கிண்ண ஒருநாள் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ். சென்றலைட்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் டொனாட்ல் வெற்றிக் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டி நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சென்றலைட்ஸ் அணியும், கொக்குவில் கே.சி.சி.சி. 'பி' அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி 'பி' அணி பிரதீபன், சத்தியன் ஆகியோரின் சிறப்பாட்டத்தின் மூலம் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி. 'பி' அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரதீபன் 48, சத்தியன் 44, நிரோஜன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரசாத், கோகுலன், மதுஷன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 201 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணியின் விக்கெட்டுக்கள் சீரான இடைவெளியில் வீழ்த்தப்பட்டது வந்தது. இருப்பினும், ஜோம்ஸ் ஜன்சனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம்சென்றலைட்ஸ்அணி நெருக்கடியிலிருந்து மீண்டது. இறுதியில் சென்றலைட்ஸ் அணி 46.3 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. இதில் ஜெம்ஸ் ஜன்சன் 49 ஓட்டங்களைப் பெற்று ஒரு ஓட்டத்தால் அரைச் சதத்தை தவறவிட்டார். மற்றும் கோகுலன் 29, ஜெரிக்துசாந் 23, ஜானோசன் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பவிதரன், பிரதீபன், நிரோஜன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஜெம்ஸ்ஜன்சன் தெரிவானர். இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் யாழ்.சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் கே.சி.சி.சி. 'ஏ' அணி மோதவுள்ளது. (எஸ்.பி.)

## விளையாட்டுச் செய்திகள்

### தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.யின் நூற்றாண்டு போட்டி முடிவுகள்

(வடமராட்சி)

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டை முன்னிட்டு வடமராட்சி கல்வி வயலத்திற்குட்பட்ட பாட-சாலை அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்தியது.

வயது அடிப்படையில் ஆண், பெண்களுக்கான கிரிக்கெட், கரப்பந்துப் போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் வெற்றியீட்டிய பாட-சாலை அணிகளின் விபரம் வருமாறு:

கிரிக்கெட்

17 வயதுப்பிரிவு ஆண்கள்: முதலாமிடம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, இரண்டாமிடம் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்.

17 வயதுப் பிரிவு பெண்கள்: முதலாமிடம் சிவகுரு வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு பெண்கள்: முதலாமிடம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு ஆண்கள் : முதலாமிடம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, இரண்டாமிடம் வேலாயுதம் மகாவித்தியாலயம்.

கரப்பந்து:

17 வயதுப் பிரிவு ஆண்கள்: முதலாமிடம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, இரண்டாமிடம் இமையாணன் அ.த.க. பாடசாலை.

19 வயதுப் பிரிவு ஆண்கள்: உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, இரண்டாமிடம் சிதம்பராக் கல்லூரி.

17 வயதுப் பிரிவு பெண்கள்: முதலாமிடம் சிவகுரு வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு பெண்கள்: முதலாமிடம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

## நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி - 20 கிரிக்கெட்

### ஸ்ரீகாமாட்சி இலகு வெற்றி



(யாழ்ப்பாணம்)

அரவிந்தனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் அரியாலை சி.சி. அணிக்கெதிரான போட்டியில் ஸ்ரீகாமாட்சி அணி இலகுவாக வெற்றிபெற்றது.

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான நியூஸ்ரார் பிறீமியர் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டித் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் ஸ்ரீகாமாட்சி அணியும், அரியாலை சி.சி. அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அரியாலை சி.சி. அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிருபா 21, நிரோஜன், நிரோ தலா 11, சுதர்சன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரதீஷன் மூன்று, பவி, ஹரிவதனன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 123 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஸ்ரீகாமாட்சி அணி அரவிந்தனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவான வெற்றிபெற்றது. இறுதியில் ஸ்ரீகாமாட்சி அணி 14.4 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அரவிந்தன் 47, பிரண-வன் 22, திவாகர், ஹரிவதனன் தலா 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரோஜன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக அரவிந்தன் தெரிவானார். (எஸ்.பி.)

### ரியூடர், சுஜீவன் சிறப்பான செயற்பாடு பற்றீசியன்ஸ் கலக்கல் வெற்றி

(யாழ்ப்பாணம்)

ரியூடர், சுஜீவன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டால் மானிப்பாய் பரிஸ் அணிக்கெதிரான போட்டியில் பற்றீசியன்ஸ் அணி அபார வெற்றிபெற்றது. நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான நியூஸ்ரார் பிறீமியர் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டித் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் மானிப்பாய் பரிஸ் அணியும், யாழ். பற்றீசியன்ஸ் அணியும் கடந்த சனிக்கிழமை மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பற்றீசியன்ஸ் அணி ரியூடர், மாதுபாலா ஆகியோரின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் பற்றீசியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரியூடர் 50, மதுபாலா 40, முரளி 38, எரிக் பிரதாப் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிதர்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 186 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மானிப்பாய் பரிஸ் அணி சுஜீவனின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திண-றியது. இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் வினோத் 43, சுபாதீபன் 31, துவாரகன் 19, நிதர்சன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுஜீவன் ஐந்து, நோபோட் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக ரியூடர் தெரிவானார். (எஸ்.பி.)

## கிண்ணம் வென்றது மணற்காடு சென். அன்ரனீஸ்



அல்வாய் மனோகராவின் ஆண்டு நிறைவுக் கால்பந்து கிண்ணத்தை மணற்காடு சென். அன்ரனீஸ் அணி கைப்பற்றிக்கொண்டது. அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகத்தின் 85ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் அனுசரணையுடன் நடத்தப்பட்ட அணிக்கு 11 பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மனோகரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் வதிரி டயமன்ஸ் அணியும், மணற்காடு சென். அன்ரனீஸ் அணியும் மோதின். இரு அணிகளும் பலம் நிறைந்த அணிகள் என்ப தால் ஆட்டத்தின் விறுவிறுப்புக்கும், பரபரப்பிற்கும் பஞ்சமிருக்காது என எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் முற்பாதி ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியின் கையே மேலோங்கியிருந்தது. முற்பாதி ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்தில் பிரேம்குமார் முதல் கோலைப் போட்டு டயமன்ஸ் அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து ஐந்தாவது நிமிடத்தில் துசிகரன் மேலுமொரு கோலைப் போட்டு டயமன்ஸ் அணிக்குப் பலம் சேர்த்தார்.

இதனைத் தொடர்ந்து வீறுகொண்ட சென். அன்ரனீஸ் வீரர்கள் சிறப்பாக செயற்பட்டனர். யேசுரூபன் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியை வலுப்படுத்தினார். தொடர்ந்து 48ஆவது நிமிடத்தில் பனால்டி வாய்ப்பு ஒன்று சென். அன்ரனீஸ் அணிக்கு வந்தது. இந்த வாய்ப்பை சிறப்பான முறையில் சென். அன்ரனீஸ் வீரர்கள் பயன்படுத்தி கோலாக்கியதுடன் போட்டியையும் சமப்படுத்தினர். இதன் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இதன் பின்னர் இரு அணி வீரர்களால் பல கோல் போடும் முயற்சியை மேற்கொண்டபோதும் அது இறுதிவரை பலனளிக்கவில்லை. இறுதியில் 2-2 என்ற கோல் கணக்கில் இருந்த நிலையில் போட்டி நேரம் நிறைவடைந்தது. இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிப்பட்டது. இதில் 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மணற்காடு சென். அன்ரனீஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக சென். அன்ரனீஸ் வீரர் அமலதாஸூம், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியைச் சேர்ந்த விஜயகுமாரும், போட்டித் தொடர் நாயகனாக ,திக்கம் இளைஞர் அணியைச் சேர்ந்த சதீர்குமாரும், வளர்ந்துவரும் வீரருக்கான விருதை டயமன்ஸ் அணியைச் சேர்ந்த துசிகரனும் பெற்றுக்கொண்டனர். (12)

# ஒரு பாமரனின் Facebook அனுபவங்கள்

**facebook Addict**

Facebook-இல் மொத்தம் எத்தனை பக்கம் இருக்கும்? நான் வெகுநாட்களாக Facebook பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். Book என்றாலே எனக்கு அலர்ஜி. ஆதலால், வெகு நாட்களாக இதை நான் தவிர்த்து வந்தேன். சமீப காலமாக நண்பர்கள் அனைவரும் இதைப்பற்றி பேசும்போது, நான் மட்டும் "ஙே" என்று ஆச்சரியப்பட்டிருக்கிறேன். நண்பர்களிடம் விசாரித்ததில், இது ஒரு social networking அமைப்பு என்று தெரியவந்தது. நான் ஒன்றும் anti-social element அல்லவே. எனவே, நான் ஏன் என் அழகிய Face-I அங்கே காட்டக்கூடாது?

அய்யா... இதோ வருகிறேன்.

ஏதோ ஒரு முனைப்போடு, இன்று Facebook உள்ளே போய், log in செய்ய முயற்சித்தேன்.

அடேங்கப்பா!!

இது பல விஷயங்களை கேட்கிறதே?

ஊர், பெயர், மனிதனா, மிருகமா, வேற்று கிரகமா, வேலை செய்பவனா, வெட்டியானா, படித்தவனா, பாட்டுப் பிடிக்குமா, பைத்தியம் பிடிக்குமா, பிறந்த நாள் (நட்சத்திரம், சாதகம் இல்லை... அப்பாடி!), பிடித்த படம், படித்த புத்தகம் etc etc... ஆத்தாடி!

ஒரு வழியாக என் சகல மச்சங்களையும் உலகுக்கு அறிவித்து, ஒரு எக்கவுண்ட் ஓப்பன் செய்தாயிற்று.

உள்ளே போனால்... ஒரே குழப்பம். என்ன செய்வது?

வலது பக்கம் 'people you may know' என்று பல புகைப்படங்கள் தோன்றின. அதில் யாரையும் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனாலும்... பாயல், ஷ்ரியா, ப்ரியா என்று சற்றே ஆறுதல் அளிக்கும் புகைப்படங்கள் ஆங்கே தோன்றின. நன்று.

நல்லவேளை, என் போட்டோவை நான் upload செய்யவில்லை. செய்திருந்தால், அதுவே, பல நண்பர், நண்பிகளை இழக்க காரணமாகி இருக்கும். "உங்க colour போட்டோவே Black & White மாதிரி இருக்கும்" என்று என் மனைவி அடிக்கும் ஜோக் இப்போது ஞாபகம் வந்தது!

ஓகே. இப்போது நண்பர்களை சேர்ப்பது எப்படி?

நல்ல வேளையாக company மூலமாக சில நண்பர்களை கண்டுபிடித்தேன். அவர்களை ஆர்வத்துடன் add-இனேன்.

பின்னர் Facebook "உன் e-mail ID கொடு" நான் நண்பர்களை தருகிறேன் என்றது. கொடுத்தேன்.

அட! நண்பர்கள் உடனே, இறக்குமதி செய்யப்பட்டார்கள்... மீண்டும் add-இனேன்!

மற்றொரு குழப்பம்... அவன் இவனுக்கு friend... இவன் அவனுக்கு friend என்று ஏகப்பட்ட தகவல்கள்... நண்பர்களின் நண்பர்கள் பரிந்துரை செய்யப்பட்டார்கள். இது எந்த அளவுக்கு வொர்க் அவுட் ஆகும் என்று தெரியவில்லை.

பார்க்காமலே நண்பனா...? என் அண்ணனுக்கு நக்கீரன் கோபாலை தெரியும். நக்கீரன் கோபாலுக்கு சந்தனக் கடத்தல் வீரப்பனைத் தெரியும்... நானும் வீரப்பனும் friends?

ஓகே. ஒரு வழியாக, Friend Requests அனுப்பியாயிற்று! அடுத்ததென்ன? தெரிந்த முகங்களையெல்லாம் காடு, மலை தாண்டி, chakra gold tea விளம்பரம் போல தேடினேன்.

எவ்வளவு நேரம் நண்பர்களைத் தேட வேண்டும்? ஒரு தடவை நண்பர்களை தேடி, நாடு தழுவிய சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொள்ளலாமா?

ம்ம்ம்... பொறுமையில்லை. LOG OFF.

அட! அரை மணி நேரம் பொழுது போனதே தெரியவில்லை...

மறுநாள் இரவு அலுவலகத்திலிருந்து வீட்டுக்குப் போனதும், லப்டொப்பை எடுத்தேன்... ஒரு சின்ன குறுகுறுப்பு... facebook-இல் என்ன வந்திருக்கும்? துடிப்பாக உடனே log in செய்தேன்.

பல இன்ப அதிர்ச்சிகள்...

"HARIKESH has confirmed that you're friends"

அட! 15 வருட நண்பர் இன்றுதான் CONFIRMED நண்பரா? சந்தோஷம் நண்பரே!

"நல்ல நண்பன் இல்லையென்றால்..." என்ற "நண்பன்" பட பாட்டு என் காதில் ஒலிக்க.. சற்றே சந்தோஷப்பட்டாலும், மற்றும் பல நெருங்கிய நண்பர்கள் இன்னும் என்னை confirm செய்யாதது மிகுந்த வருத்தம் அளித்தது! ஓகே. ஆனால், என் ஒரே பயம்... enemy Mf confirm செய்ய ஏதாவது option உள்ளதா?? யாரிடமாவது விசாரிக்க வேண்டும்...

சற்று நேரம் கழித்து, பல mail-கள் வந்து என் inbox-I நிரப்பின.... என் அருமை நண்பன் add செய்யும் ஒவ்வொரு போட்டோவுக்கும் facebook எனக்கு இ-மெயில் அனுப்பியது. மீண்டும் என் காதில் ரீங்காரம்... "நல்ல நண்பன் இல்லையென்றால்..."

ஒவ்வொரு போட்டோவாக பார்க்க ஆரம்பித்தேன்...

இதற்கிடையில் மற்றுமொரு நண்பர் தன் blog link அனுப்பியிருந்தார்... அது கோயில், குளம் சம்பந்தமான blog! இதை, என் போன்ற ஒரு தறிகெட்டவனுக்கு அனுப்பியதை ஒரு பெருமையான விஷயமாக நினைக்கிறேன்.

மற்றுமொரு வீடியோ லிங்க்...

"Your friend divakar liked your activity!" எந்த ACTIVITY? எனக்கு இப்போதே தெரிந்தாக வேண்டும்!

என் interest-இல் tamil comedy இருந்ததால், பல தரப்பட்ட காமெடி துணுக்குகள் வந்து விழுந்தன. பல joke-கள் சற்றே அழ வைத்தாலும், சில நல்ல ஜோக்-களும் இருந்தன.

facebook-இல் நிறைய விஷயங்கள் எனக்கு முற்றிலும் புதிது!

இன்னும் என்னென்ன பார்க்கலாம் என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும்போது... மீண்டும் அந்த ரீங்காரம்... இம்முறை, "நல்ல நண்பன்..." இனிய பாடல் கேட்கவில்லை, எல்.ஆர்.ஈஸ்வரி குரலில் யாரோ என்னைத் திட்டுவதை நான் திடீரென்று உணர்ந்தேன். என் அன்பு மனைவியின் அதே வெண்கல குரல்! ஆனால், இது வேறு பாட்டு!

"செல்லாத்தா" மாரியாத்தா..." அம்மன் பாட்டும்... தொடர்ச்சியான அர்ச்சனையும்...

"குழந்தை தனியா இருக்கிறாள்" வாசல் கதவையும் பூட்டேல்லை.. லைற்றும் போடேல்லை... என்னதான் லப்டொப்பில நோண்டுறீங்களோ தெரியேல்லை... என்று மூச்சுவிட்டு, அவள் அடுத்த பல்லவியையும் ஆரம்பிக்க...

நேரத்தைப் பார்த்தால்... மணி பத்து!

அடேயப்பா! சுளையாக 2 மணி நேரம் வெறும் மொக்கை போட்டிருக்கிறேன்...

இன்று என் மகளுக்கு கதை சொல்லவில்லை... என் அப்பாவுடனும் அம்மாவுடனும் தினமும் செலவிடும் அரைமணி நேரம் out!! மனைவியுடனும் ஒரு வார்த்தை பேசவில்லை!

அடடா... இந்த facebook என்னை மிகவும் ஆக்கிரமித்து விட்டதோ??

ம்... நமக்கு நண்பர்கள் வேண்டும்தான்... ஆனால், இது இனிமேல் வேண்டவே வேண்டாம் என்று முடிவு செய்து, log off செய்தேன். இனி, பார்க்க மாட்டேன் உறுதி... மனைவியிடமும் திரும்பி சத்தியம் செய்தேன்.

பின்னர், இரவு படுத்து, என் மகளுடன் பேசிக்கொண்டிருக்கும் போது, என் android mobile எனக்கு notify-யது, "your friend has added new photo"

என்ன photo-வாக இருக்கும்??? Click!

எல்.ஆர்.ஈஸ்வரி மீண்டும் பாடினாள்!

# சிறை மீண்ட ராதா...

- R.P.ராஜநாயஹம்

எம்.ஜி.ஆரை சுட்ட வழக்கில் கோர்ட்டில் இரண்டு பேருடைய வக்கீல்களும் சீரியஸ்ஸா வாதாடிக்கொண்டிருந்த போது "பாவம் இவங்க என்னனத்தையோ போட்டு குழப்பிக்கிட்டு தவிக்கிறாங்க. ஆனா உண்மை என்னன்னு எனக்கும் எம்ஜியாருக்கும் தான் தெரியும். என்ன ராமச்சந்திரா!"- இப்படி கோர்ட்டிலேயே எம்ஜியாரைப் பார்த்து படு ஜாலியாக கேட்டவர் ராதா. நீதிபதி, வக்கீல்கள் எல்லோரும் இவருடைய இயல்பை கண்டு அசந்து போனார்கள்.

எம்.ஜி.ஆரை சுட்ட வழக்கில் எம்.ஆர்.ராதா விடுதலையாகி வெளிவந்தபின் அவருக்கு மங்குதசைதான்.

பாகவதர் புகழின் உச்சியில் இருக்கும்போது லட்சுமிகாந்தன் கொலைவழக்கில் கைதாகி என்.எஸ்.கே. ஸ்ரீராமுலு நாயுடு ஆகியோருடன் குற்றவாளியாகி சிறை சென்று விடுதலையான பின்னால் அவருக்கு சாதிக்க எதுவுமே இல்லை யென்றானது.

ம்ஹும்.. யார் வாழ்வுதான் சதம்?

ராதாவும் சிறையிலிருந்து விடுதலையானபின் அவருடைய முந்தைய சாதனைகளுக்கு ஈடாக திரைப்படங்களில் எதுவும் பெரிதாய் சாதிக்க முடியவே இல்லை.





பரபரப்பான சூழ்நிலையில் மதுரை மேலமாசிவீதியில் நடந்த ராதா நாடகத்திற்கு அவரைப் பார்க்கிற ஆர்வத்தில் சரியான கூட்டம்.

நாடகத்தில் வழக்கம்போல அவருடைய சுதந்திர வசனம்.

"நான் நடிகன். அதுக்காக எனக்கு ரசிகர் மன்றமெல்லாம் ஆரம்பிச்சிடாதீங்க."

"அங்க யாரு கச,கசன்னு பேசிக்கிட்டிருக்கிறான். நான் இங்க கத்துறேன். அவனும் கத்துறான். பொலிஸ் என்ன செய்ற? அவனை அடிச்சி தூக்கி வெளியே வீசு."

ராதாவின் மாறும் முகபாவங்கள் தூரத்தில் நிற்பவர்களாலும் மிக தெளிவாக க்ளோசப் ஷொட் போல காண முடியும்.

சில படங்கள் ராதா நடிப்பதாய் தினத்தந்தியில் முழுப்பக்க விளம்பரங்கள் பிரமாண்டமாய் வந்தன.

"அண்ணா பேரை சொல்லி"

"சுட்டான் சுட்டேன்"

அவ்வளவுதான். பருப்பு வேகவில்லை. படம் எதுவும் வரவில்லை. சிறை மீண்ட ராதாவை சிவாஜிகணேசன் ஆதரிக்கவில்லை. அவருடைய படங்களில் எம்.ஆர்.ஆர்.வாசுவுக்கு வாய்ப்பளித்த சிவாஜி ஏனோ ராதாவை ஒதுக்கிவிட்டார்.

மங்கு தசையில் வாய்ப்பு எப்படி இருக்கும். ஜெய்சங்கர் படமும் மு.க.முத்து படமும் தான் ராதாவுக்கு கிடைத்தன. கே.எஸ்.ஜியின் தசாவதாரம் படத்தில் ஒரு வாய்ப்பு.

1976இல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட நிலையில் பலரும் மிசாவில் கைது செய்யப்பட்டபோது மீண்டும் ராதா சிறை செல்ல வேண்டியிருந்தது.


ஒரு பிரமுகரை சிறைஅதிகாரிகள் அப்போது கடுமையாக தாக்கியபோது ராதா தைரியமாக "அடிக்க வேண்டாம்" என்று சொன்னாராம்.

பஞ்சபூதம், வேலும் மயிலும் துணை, கந்தர் அலங்காரம் இப்படி சாகும் வரை நடித்தார். gioa scene stealer காணாமலே போய்விட்டார்! "ஸ்டார்ட் கமெரா, க்ளாப், ஆக்ஷன்" என்றவுடன் சீறி நடிக்கும் முதியவர் ராதா "கட்" சொன்னதும்' உட்கார்ந்து இரைத்து இளைப்பார்.

கடைசி வரை நாடகங்கள் போடுவதை நிறுத்தவில்லை. சிங்கப்பூர், மலேசியா என்று போய்க்கொண்டிருந்தார்.

"ரெண்டு பேர் கையிலும் துப்பாக்கி இருந்தது. சுட்டுக்கிட்டோம்" என்றே கடைசி வரை மேடைகளில் சொன்னவர்.


# பாடசாலையின் நூலகப் பயன்பாடு



“வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்” எனும் கூற்று வாசிப்பதன் மகத்துவத்தை எடுத்துரைக்கின்றது. வாசிப்பு என்பது ஒரு மனிதனை முழுமையடையச் செய்கின்றது. அதாவது அறிவியல் நூல்கள், இலக்கிய நூல்கள் அல்லது பத்திரிகைகள் என நாளாந்த வாசிப்பின் மூலம் ஒரு மனிதன் தான் தெரிந்து கொண்டவை அல்லது அறிந்து கொண்டதை விட மேலான உலக நடத்தைகள், அனுபவங்கள் போன்றவற்றை அறிந்து பெற்றுக் கொள்ளமுடியும்.

இதனை விருத்தி செய்யும் பொருட்டு பொது இடங்களில் அல்லது பிரதேசங்களில் பொதுநூலகங்கள், பாடசாலைகளில் அதற்குரிய நூலகங்கள் என இயங்கி வருகின்றன. பாடசாலையில் அமைந்துள்ள நூலகமானது மாணவர்களிற்கு கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும். மாணவர்களாகிய எமக்கு கற்றல் நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்வதற்கும் பொது அறிவுகளை வளர்த்துக்கொள்ளவும் நூலகம் பெரிதும் துணைபுரிகின்றது.

“நூலகம் ஒரு சிறைச்சாலை. அங்கே நூல்கள் கைதிகளைப் போன்றவை” கைதிகள் தங்களைத் தேடி யார் வருவார்கள், தங்களுடன் யார் உரையாடுவார்கள், தாம் எப்போது வெளியே செல்லமுடியும் என எதிர்பார்ப்பது போலவே நூல்களும் எதிர்பார்க்கின்றன. இது ஒரு இயல்பான எடுத்துக்காட்டாகும். மாணவர்களாகிய நாம் எமது தேடலுக்கு தீனி போடுவதற்கென அமைந்த நூலகத்தை சிறப்பான முறையில் பயன்படுத்த வேண்டும். ஓய்வு நேரங்களைப் பெறுமதியாக கழிப்பதற்கு பாடசாலை நூலகங்கள் பெரிதும் பயனளிக்கின்றன.



ஒரு பூஞ்சோலையின் உள்ளே திடீரென நுழைந்த பட்டாம் பூச்சிக் கூட்டத்திற்கு விருந்தளிக்கின்ற பூக்களில் உள்ள தேனைப்போல ஒரு நூலகமானது தன்னைத் தேடி வருகின்ற மாணவர்களிற்கு நூல்களில் உள்ள அறிவென்ற தேனை விருந்தாக அளிக்கின்றது. இந்த நூலகத்தை சிறப்பான முறையில் பயன்படுத்திக் கொள்பவருக்கு மிகுந்த நற்பயனை அது வழங்குகின்றது.

கற்றல் சார்ந்த பயிற்சிகள், பொது அறிவுத்தகவல்கள், ஆன்மிகத்தகவல்கள் இவற்றை யெல்லாம் விட நாளாந்தம் வெளிவருகின்ற நாளிதழ்களில் உலகிலே, நாட்டிலே நடக்கின்ற நடப்பு விடயங்களை அறிந்து கொள்ளவும் பயன்படுகின்றது.

அதனை விட முக்கியமாக அமைதியைப் பேணும் முறையினையும் பாடசாலையிலே நூலகமானது பயிற்றுவிக்கின்றது. இதன்காரணமாக அறிவு வளர்ச்சியில் பங்களிப்பது மட்டுமல்லாது நற்பண்புகளை வளர்த்துக்கொள்ளவும் நூலகம் பங்களிக்கின்றது.

ஆரம்பப்பிரிவு மாணவர்களிற்கும் அவர்களுக்கு ஏற்ற வகையில் சிறுவர்கதைப் பூங்கா, மழலைப் பூங்கா போன்ற ஆர்வமூட்டும் புத்தகங்களை உள்ளடக்கியுள்ளது. இதன்மூலம் சிறுவயதிலேயே நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் வழக்கம் ஆரம்பத்தில் இருந்தே கற்பிக்கப்படுகின்றது.

நூலகமானது மாணவர்களிற்கு தேவையான தகவல்களையும் அறிவுகளையும் வழங்குவதில் மட்டுமன்றி ஆசிரியர்களிற்கும் தேவையான தகவல்கள், உசாத்துணை அறிவுகளை வழங்குவதில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இப்படி அறிவு விருத்திக்கும், தேடலுக்கும் பங்களிப்பதில் பாடசாலையின் நூலகமானது மிக்க பயன்பாடுடையதாகக் காணப்படுகின்றது. மாணவர்களாகிய நாங்கள் சிறந்த முறையிலும் தேவைக்கு ஏற்ப நூல்களைப் பயன்படுத்தி நூலகப் பயன்பாட்டை முழுமையாகப் பெறுவோம்.

“சிறந்த நூல்கள் - நல்ல நண்பர்களைப் போன்றவை”

- கோ. துஷியா
மு/யோகபுரம் ம. வி.

## அகராதியைப் படித்தவர்!

- காகிதக் கப்பல் செய்து நீரில் விட்டு மகிழ்வது கவிஞர் ஷெல்லியின் வழக்கமாம்.
- எர்னஸ்ட் ஹெமிங்வே, நாவல்களை எழுதப் பென்சிலைத்தான் பயன்படுத்துவாராம்.
- ஐன்ஸ்டீன் ஷேவ் செய்யும்போது விசிலடித்துப் பாடுவாராம்.
- விதவிதமான தொப்பிகளைச் சேகரிப்பதென்றால் வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு மிகவும் பிடிக்கும்.
- விக்டர் ஹ்யூகோ, புகழ்பெற்ற “லே மிஸரபிள்” நூலை நின்றுகொண்டே எழுதினாராம்.
- சார்ள்ஸ் டிக்கன்ஸக்கு கட்டிலில் ஒரு குறிப்பிட்ட நிலையில் படுத்தால்தான் தூக்கம் வருமாம்.
- தீயணைப்பு வாகன சைரன் சத்தம் கேட்டால் லியோ டால்ஸ்டாய் மெய்ம்மறந்து விடுவாராம்.
- அலெக்ஸாண்டர் டூமாஸ் எழுதும்போது நண்பர்கள் வந்தால் வலது கையால் எழுதிக் கொண்டே இடது கையால் கைகுலுக்குவாராம்.
- அகராதியைக் கையில் எடுத்தால் நேரம் போவதே தெரியாமல் படிப்பாராம் ஆபிரகாம் லிங்கன்.




# இறுக்கமான இராஜதந்திர யுகம் முடிவடைந்துவிட்டது

- கேணல். ஹரிஹரன் நேர்காணலிலிருந்து.

இறுக்கமான இராஜதந்திரம் (மக்களை கையாளும் திறன் மற்றும் தந்திரமான இராஜதந்திரம்) உட்பட இந்த விடயத்தில் எனது கருத்துக்கள் பின்வருமாறு: முதலாவது, இலங்கை உதைபந்தாட்ட அணிகள் மற்றும் யாத்திரிகர்கள் ஆகியோரை திருப்பி அனுப்பிய செல்வி ஜெயலலிதாவின் சமீபத்தைய நடவடிக்கை பற்றி அவர் இப்போது விளக்கியிருப்பது, இலங்கை தமிழர்களைத் தொடர்ச்சியாக நடத்தி வரும் இயல்புக்கு மாறான நிலைக்கு எதிராக தனது எதிர்ப்பைப் பதிவுசெய்வதற்காக தான் மேற்கொண்ட நடவடிக்கையே அது என்று. இலங்கை யாத்திரிகர்கள் மற்றும் ஏனையவர்கள் தமிழ்நாட்டுக்கு வருகை தருவதை வரவேற்கிறோம் என்று தெரிவித்திருப்பதுடன், இலட்சக்கணக்கான மக்கள் இலங்கையிலிருந்து சென்னைக்கு வந்துபோகிறார்கள் என்பதையும் தனது அறிவிப்பில் அவர் சாதுர்யமாக சேர்த்துக் கொண்டிருக்கிறார்.

இரண்டாவது, இலங்கையுடனான வர்த்தகத்தை புறக்கணிக்கும்படி அவர் விடுத்துள்ள அழைப்பு, இந்தோ - லங்கா வர்த்தகம் செழித்து வளர்ந்துள்ள நேரத்தில் வந்துள்ளது, இப்போது அதன் மதிப்பு நான்கு பில்லியன் டொலர்கள். இந்த வர்த்தகத்தில் தமிழ்நாட்டிற்கு மிகப் பெரியதொரு பங்கு உள்ளது. உலகப் பொருளாதார வீழ்ச்சியினால் வர்த்தக அளவுகள் சுருங்கியுள்ள வேளையில், இலங்கையுடனான வர்த்தகத்தைத் தடை செய்வது புத்திசாலித்தனம் அல்ல. முதலமைச்சரின் இந்த அறிவிப்பு அநேகமாக அவரது அரசியல் போட்டியாளரான தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி இலங்கை தமிழர் பிரச்சினையை முன்னிறுத்தி ஆதாயம் தேடுவதை தடுப்பதற்கான முன்னரங்கமான அரசியல் சொல்லாட்சி.

மூன்றாவது, மத்திய மாநில உறவுகள், இதுவும் நீங்கள்



குறிப்பிடும் இனத் தேசியவாதம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்படி தமிழ்நாடு டில்லிக்கு தொடர்ச்சியாக விடுக்கும் அழைப்புகளின் பின்னணியில் தங்கியுள்ளது. முதலமைச்சர் புதுடில்லியிடம் வலியுறுத்துவது, தனது கவலைகளைப் பற்றி தீவிர கவனம் செலுத்தும்படி, அது தேசிய இருப்பை வலியுறுத்தும் அவரது தனி வழி. மற்றைய பிராந்திய சத்திரபதிகளான, மம்தா பானர்ஜி மற்றும் முலாயம் சிங் போன்றவர்களும் இதே வழியைத்தான் கடைப்பிடிக்கிறார்கள். வெளியுறவுக் கொள்கைகளைப் பற்றி அவர்கள் வெளியிடும் கருத்துக்களுக்குப் போராட்டம் நடத்தும் குணம் என்று அர்த்தம் கொள்ளலாகாது. அது கொள்கை வகுப்பில் மாநிலத்தின் உணர்ச்சிகளையும் கவனத்தில் கொள்ளும்படி புது டில்லிக்கு விடுக்கப்படும் ஒரு அழைப்பு மட்டுமே. வரும் வருடங்களில் தேசியக் கட்சிகள் மத்தியில் ஆட்சி அமைப்பதற்காக ஒரு கூட்டணி அமைப்பதற்கு அவர்களின் தேவையை நாடும்போது, பிராந்திய தலைவர்களிடமிருந்து இன்னும் அதிகமான அப்படிப்பட்ட கோரிக்கைகளை நாம் எதிர்பார்க்கலாம்.

நான்காவது, இறுக்கமான இராஜதந்திரம். அந்த யுகம் முடிவடைந்துவிட்டது. அமெரிக்கா தனது முழுப் பலத்தை பிரயோகித்தும் சிரியாவில் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த இயலவில்லை. எனவே இந்தியா தனது விருப்பப்படி நடக்கும்படி இலங்கையை கட்டாயப்படுத்துகிறது என்கிற கேள்விக்கே இடமில்லை. ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் அக்கறை என்பனவற்றை நல்கி, குதிரையின் முன் கரட் துண்டுகளை காட்டி பிரம்படி கொடுத்து நகர்த்துவதைப்போல சர்வதேச உறவுகளில் நல்ல விளைவுகளை உருவாக்கலாம்.


இந்தியா ஏற்கனவே, இலங்கையின் கொள்கைகளை அதன் சர்வதேச அந்தஸ்து, பொருளாதார, கலாசார, சமய மற்றும் மூலோபாயம் என்பனவற்றிற்கு ஏற்ற வகையில் வடிவமைப்பதில் ஏராளமான செல்வாக்கினை செலுத்தி வருகிறது. இந்தச் செல்வாக்கினை பயன்படுத்தி மதிப்புமிக்க நாடான இலங்கையைப் போன்ற ஒன்றை நாங்கள் நிர்ப்பந்திக்க நினைத்தால், நாம் அதனை தனிமைப்படுத்தியதாகவே இருக்கும்.

தெற்காசியாவில் சீனா உள்நுழைவதை பற்றி நாங்கள் விவாதிக்கும்போது சில விடயங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். சீனா ஒரு உலகளாவிய பொருளாதார சக்தியாக மாற்றம் பெற்றுள்ளது, சீனாவின் உலகளாவிய நலன்களைப் பாதுகாப்பதற்காக சீனாவின் இராணுவத்தை நவீனமயமாக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது, அது உலக உற்பத்தி மையமாக உருவெடுத்துள்ளதுடன் பேரம் பேசலில் உலகின் மிகப்பெரிய நுகர்வோர் வளங்களை கொண்டதாகவும் மாறியுள்ளது, அது தன்னுடைய மூலோபாய இலக்கை அடைவதற்காக தன்னுடைய இராணுவ மற்றும் பொருளாதார செல்வாக்கினைப் பயன்படுத்த தயங்கப் போவதில்லை.

உலக பொருளாதார சரிவு சீனாவின் வளர்ச்சி விகிதத்தை பாதித்துள்ளது. மற்றும் யாரும் தட்டிப்பார்க்காத மிகப்பெரிய தெற்காசியச் சந்தைகள் மற்றும் இயற்கை வளங்களின்மீது அது இப்போது கண் வைத்துள்ளது. சீனாவிடம் இல்லாத புவியியல், வரலாற்று, கலாசார நன்மைகளை கொண்ட இந்தியாதான் தெற்காசியாவில் ஆதிக்க சக்தி என்பது சீனாவுக்கு நன்கு தெரியும். தெற்காசியாவில் சீனர்கள் செல்வாக்கு பெறுவதற்கு இந்தியா வெகு எளிதாக விட்டுக் கொடுக்காது என்பதும் சீனாவுக்கு நன்கு தெரியும். தெற்காசியாவில் சீனா நுழைவதற்கு ஏதுவாக உள்ள அனுகூலுங்களை இந்தியா தடுப்பதற்கு முயற்சிக்கும். இதைக் கருத்தில் கொள்ளும்போது சீனா மற்றும் இந்தியா ஆகிய இரண்டும் இரு பெரிய நாடுகள் என்ற வகையில் யுத்தம் ஒன்றுக்கு செல்லாமல் ஒருவரை ஒருவர் சமாளிப்பதற்காக பொருளாதாரம் மற்றும் மூலோபாயம் இரண்டும் கலந்த ஒரு அதிகார விளையாட்டை பயன்படுத்தும். சீனாவால் வெறுமே இந்தியாவை புறந்தள்ளிவிட முடியாது. அதேபோல இந்தியாவாலும் சீனா தெற்காசியாவில் அனுகூலங்கள் தேடுவதை நிறுத்திவிட முடியாது. தனது நலன்களை உறுதிப்படுத்தும் வகையிலும் மற்றும் சீனாவின் வளர்ச்சி ஒரு வரையறுக்கப்பட்ட பகுதிக்குள் மட்டும் அடங்ககூடிய வகையில் ஒரு மரபுவழி மூலோபாயத்தை இந்தியா பின்பற்ற வேண்டும். சீனா இந்தியாவின் முதல்தர வர்த்தகப் பங்காளியாக உருவெடுத்துள்ளதையும் நாங்கள் கவனிக்க வேண்டும். இது இரு நாடுகளின் கொள்கை அம்சங்களில் அதன் சொந்தத் தாக்கங்களை ஏற்படுத்தும். எனவே சீனாவை அலட்சியம் செய்யும்படி எங்கள் அயலவர்களிடம் நாங்கள் எப்படிக் கேட்பது? அது யதார்த்தமாகாது.

# உலக நாடுகளில் அதிகாரம் தேர்தல் மூலம் மாறவில்லை

## எகிப்து உதாரணம் என்கிறார் சோமவன்ச



(கொழும்பு)

உலக நாடுகளில் அதிகாரம் கைமாறுவது தேர்தல்கள் மூலம் அல்ல எனவும் ஜே.வி.பி தேர்தலில் தோற்றாலும் விரைவில் அரசாங்கத்தை பதவியில் இருந்து இறக்கி விட்டு, ஆட்சியை ஏற்படுத்தப் போவதாக அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது

தேர்தல்கள் இல்லாமல் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் விதம் தொடர்பில் உலக நாடுகளிடம் இருந்து சிறந்த உதாரணங்கள் கிடைத்துள்ளன. எகிப்தில் 80 முதல் 85 வீத வாக்குகளைப் பெற்ற முபாரக் இப்படியான முறையிலேயே மக்கள் அவரை விரட்டியடித்தனர். நீண்ட நாள் செல்லும் முன்னர், இலங்கையிலும் இவ்வாறான புரட்சியே ஏற்படும்.

வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என அனைத்து மக்களுக்கும் வீதியில் இறங்கிப் போராடி, எதிர்க்கட்சியை உருவாக்கி முபாரக்கை பதவியில் இருந்து தூக்கினர். இலங்கையிலும் இவ்வாறான சக்தி உருவாகி வருகிறது. அப்போது அதில் புத்திஜீவிகளும், மக்களும், மாணவர்களும் அடங்கியிருப்பர்.

இப்படியான சந்தர்ப்பம் ஏற்படும் போது, அண்மையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்றோம் எனக் கூறுவதில் பிரயோசனம் ஏற்படப் போவதில்லை. இந்த வெற்றி சில நாட்களுக்குக் கூட செல்லு படியற்றது. எதிர்ப்பு வரும் விதத்தைப பார்த்துக் கொண்டிருங்கள். பொது எதிர்க்கட்சி உருவாக்கப் பட்டாலும் அதில் ஜே.வி.பி பங்கெடுக்காது. சரத் பொன்சேகாவுடன் ஜே.வி.பிக்கு புரிந்துணர்வு இல்லை. அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆட்சிக்கு வரப்போவது ஜே.வி. பிதான் எனவும் சோமவன்ச அமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## வடக்கு கிழக்கில் இறப்பர் செய்கை



(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இறப்பர் செய்கையினை மேற்கொள்வது குறித்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இறப்பர் ஆராய்ச்சி நிலையம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மடுகந்த, நெடுங்கேணி, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகள் வெற்றியளித்துள்ளதாக நிலையத்தின் பணிப்பாளர் காமினி செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிப் பகுதியில் 40 ஏக்கர் நிலப்பரப்பில் தற்போது இறப்பர் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பல்கலை மாணவர் பாதிப்பு விசாரிப்பதற்குத் தீர்மானம்

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பணிப்பகிஷ் கரிப்பினால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பல்கலைக்கழக மாணவரகளிடமிருந்து முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளவுள்ளதாக ஆணைக குழுவின் தலைவர் கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் சுமார் 78 நாட்களாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு அவ தானம் செலுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# கிழக்கில் பலகட்சி நிர்வாகம் முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்பு



(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையில் பல்கட்சி நிர்வாகம் ஏற்படுவதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்கும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாடடிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையில் கூட்டு நிர்வாகத்தை ஏற்படுத்த வருமாறு ஐ.தே.க.மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப், அப்துல் மஜீத் பதவியேற்ற பின் அழைப்பு விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த யோசனையை வரவேற்ற மு.கா பொதுச் செயலாளர் ஹசன் அலி, இத்தகைய யோசனையானது கிழக்கு மாகாண சமூகங்களிடையே ஐக்கியத்தை ஏற் படுத்துவதற்கு சிறந்த தெரிவாகும் எனவும் கூறினார்.

அதேவேளை காணி ஆணைக குழுவொன்றை நியமிக்குமாறும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்துமாறும் அரசாங்கத்தை முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தும் எனவும் அவர் கூறினார்.

"முஸ்லிம்களின் காணி உரிமைகள் தொடர்பான யோசனைகளைக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக குழுவிடம் நாம் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளோம். எனவே அந்த யோசனைகளை அமுல் படுத்துமாறு நாம் அரசாங்கத்தை வலியுறுத்துவோம்" என அவர் கூறினார்.

## உறுதிப்படுத்தப்பட்டுள்ள யாத்திரிகர்களின் பாதுகாப்பு

(கொழும்பு)

இந்தியாவிற்கு புனித யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாத்திரையை மேற்கொள்ளும் பக்தர்கள் எவ்வித அச்சமும் இன்றிச் செல்ல முடியுமெனவும் புத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய அரசுடன் ஒன்றிணைந்து இந்த விசேட திட்டத் தை நடைமுறைப்படுத்தியுள்ளதாக பதில் அமைச்சர் என்.கே. டி.எஸ்.குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை யாத்திரிகர்களின் பாதுகாப்பை உறுதி செய்துள்ளமை குறித்து வெளிவிவகார அமைச்சின் ஊடாக இந்திய மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவ மேஜர் குற்றவாளி விசாரணை மன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

இராணுவ புலனாய்வுப் பிரிவு மேஜர் ஒருவர் பிரபல அரசியல்வாதியொருவரின் மகன் உட்பட குழுவொன்றினால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான இராணுவ விசாரணை மன்ற விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

அத்துடன் மேற்படி புலனாய்வு அதிகாரி அச் சம்பவத்தின் போது கடமையில் இருந்த வரல்லாத நிலையில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தின்போது தான் உத்தியோகபூர்வ பணியில் இருந்ததாக மேற்படி மேஜர் தெரிவித்த போதிலும் உத்தியோகபூர்வ கடமை நிமித்தம் அவர்அங்கிருக்கவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூவரடங்கிய குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை, இலங்கை இராணுவத்தின் சட்டப்பிரிவிடம் கையளிக்கப் பட்டது

மேற்படி சட்டப்பிரிவானது தனது அறிக்கையை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரியவிடம் நேற்று கையளித்தது. இராணுவத் தளபதி இதை மேலும் ஆராய்ந்து தனது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பார்.

இராணுவத் தளபதியின் அபிப்பிராயத்தின் அடிப்படையில் இராணுவ சட்டப்பிரிவானது தேவையேற்படின் மேலதிக நடவடிக்கையை மேற்கொள்ளும்.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்து, தனது துப்பாக்கியை இழந்த மேஜர், மேற்படி அரசியல்வாதியின் மகன் அடங்கிய குழுவினர் தன்னைத் தாக்கவில்லை எனவும் இவ்விடயத்தைத் தான் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளத்தயார் எனவும் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் தொடர்பான சோதனை நடவடிக்கையொன்றுக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்து விட்டு, சம்பவ இடத்திற்கு தான் சென்றதாகவும் அவர் கூறியிருந்தார்.

அவர் அளித்த வாக்கு மூலத்தை வாபஸ் பெற்றது ஏன் எனக் கேட்டபோது, மேற்படி சம்பவத்தின்பின் தான் அதிர்ச்சி யடைந்திருந்த நிலையில் அவ் வாக்கு மூலத்தை அளித்ததாக அவர் கூறியமை குறிப்பிடத்தக்கது

## சிறுவர் துஷ்பிரயோக வழக்கு; துரிதப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துவது குறித்து அனைத்து மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவுறுத்துவதற்கு பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க தீர்மானித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பிரதம நீதியரசரிடம் தெளிவு படுத்தியதனைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் பாலித பெனாண்டோ குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பிலான தகவல்களை பிரதம நீதியரசரிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய வழக்கு விசாரணைகளை நான்கு மாதங்களுக்குள் விசாரித்து நிறைவு செய்வதே இதன் நோக்கம் என சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கு விசாரணைகள் நான்கு மாவட்டங்களில் ஆறு மாதங்களுக்குள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## திரைப்படத்திற்கு தடை

இஸ்லாம் மதத்தை இழிவு படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படும் திரைப் படத்தை இலங்கையில் தடை செய்ய எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளை யும் எடுப்பதாக புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. எந்தவொரு மதத்தையும் இழிவுபடுத்தும் வகையில் இடம் பெறும் செயற்பாடுகளைக் கண்டிப்பதாக புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் பதில் அமைச்சர் எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இஸ்லாம் மதத்திற்கு இழிவு ஏற்படுத்தியுள்ள திரைப்படத்தை இலங்கையில் ஒளிபரப்பாதிருக்க உரியவர்களுக்கு பத்திரிகை மூலம் அறிவிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மதுபானசாலையை அகற்றக்கோரி மன்னாரில் எதிர்ப்புப் பேரணி



(மன்னார்)

மன்னார்- பனங்கட்டிக்கொட்டுப் பகுதியில் அமைந்துள்ள மதுபானச் சாலையை அவ்விடத்தில் இருந்து அகற்றுமாறு கோரி பனங்கட்டிக்கொட்டு கிராம மக்கள் உட்பட அயல் கிராம மக்கள் அனைவரும் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை காலை அமைதியான கண்டனப்பேரணி ஒன்றை மேற்கொண்டு மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர். பனங்கட்டிக்கொட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கம் உட்பட அக்கிராமத்தில் உள்ள அனைத்து பொது அமைப்புக்களும் இணைந்து இக் கண்டனப்பேரணியினை ஏற்பாடு செய்திருந்தன.

அன்று காலை 9.30 மணியளவில் மன்னார்- பனங்கட்டிக்கொட்டு கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கப்பலேந்தி மாதா திருச் சொரூபத்திற்கு அண்மையில் ஆரம்பமான குறித்த பேரணி, வைத்தியசாலை வீதியூடாகச்சென்று மீண்டும் பனங்கட்டிக்கொட்டு கிராமத்தினுடாக பொலிஸ் நிலைய வீதியூடாக சென்றது. பின் கடைத்தெருப் பகுதி யூடாகச் சென்று மன்னார் மாவட்ச் செயலகத்தை சென்றடைந்தது. மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லிடி மெல்லிடம் பனங்கட்டிக்கொட்டு உதவிப் பங்குத்தந்தையினால் மகஜர் கையளிக்கப் பட்டது.

பின் அங்கிருந்து பேரணி மன்னார் நகரசபைக்குச் சென்று மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசத்திடமும் குறித்த மகஜரின் பிரதி வழங்கப்பட்டது. குறித்த பேரணியின் போது மன்னார் பனங்கட்டிக்கொட்டு கிராமம் உடபட அயல கிராம மக்கள்,பொது அமைப்புக் களின் பிரதிநிதிகள், மன்னார் குரு முதல்வர் அருட் தந்தை அன்ரனி விக்டர் சோசை, அருட் தந்தையர்கள், அருட்சகோதரிகள், மன்னார் ஸ்ரீ சுவர்ணவிம் பாராமய தேரர் பன்னுவஸ் நுவர விமலரத்தனதேரர் பாடசாலை மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர்கள் கலந்து கொண்டனர்.

# தீவகம் வடக்கு பிரதேச அபிவிருத்திக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

2012 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப் பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலமாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மற்றும் ஈ.பி.டி.பி. யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் தமது நிதி மூலம் தீவகம் வடக்கு ஊர்காவற்துறை பிரதேச அபிவிருத்திக்கு 7 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளனர். இதன்படி-

இருதயராசா சனசமூக நிலையத்தின் தளபாடக் கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், கிராமஅபிவிருத்தி சங்கத்திற்கு தனபாடக் கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், காந்திஜி முன்பள்ளியின் சுற்றுமதில் புனரமைப்புக்கு 1 இலட்சம் ரூபாவும், அருணோதயா முன்பள்ளிக்கு தளபாடக் கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், இந்து இளைஞர் வாலிபர் சங்கத்திற்கு தளபாடக் கொள்வனவுக்கென 50ஆயிரம் ரூபாவும், ஸ்ரீஞான வைரவர் சனசமூக நிலையத்தின் மின் இணைப்பு, புனரமைப்புக்கென 1இலட்சம் ரூபாவும், முருகவேள் வித்தியாலயத்திற்கு உயரம் பாய்தலுக்கான கம்பம் தயாரித்தலுக்கு 50 ஆயிரம் ரூபாவும், றோ.க.த.க. வித்தியாலயத்திற்கு மண்நிரப்புதலுக்கு 75ஆயிரம் ரூபாவும், சென் அன்ரனிஸ் சனசமூக நிலையத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25ஆயிரம் ரூபாவும், சின்னமடு சனசமூக நிலையத்திற்கு சமையல் பாத்திரங்கள் கொள்வனவுக்கென 25 ஆயிரம் ரூபாவும், ஊர்காவற்துறை சனசமூக நிலையத்திற்கு தளபாடக்கொள்வனவுக்கென 25 ஆயிரம் ரூபாவும், மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு தளபாடக்கொள்வனவுக்கென 70 ஆயிரம் ரூபாவும், ஊர்காவற்துறை குடிநீர் விநியோக விஸ்தரிப்புக்கு 1 இலட்சம் ரூபாவும் ஒதுக்கியுள்ளனர்.

# நிர்வாகிகளுக்கிடையே முரண்பாடுகள்; இழுபறி நிலையில் செயற்பாடுகள்

(வவுனியா)

வவுனியா நகர முகைதீன் ஜும்மா பெரிய பள்ளிவாசலின் நிர்வாகிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் காரணமாக கடந்த 3 ஆண்டுகளாக நிர்வாக செயற்பாடுகள் இழுபறி நிலையில் உள்ளது என பள்ளிவாசலின் நிர்வாக சிக்கலினால் பாதிப்படைந்துள்ள சில நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மக்களால் தெரிவு செய்யப்பட்ட 15 நிர்வாகிகளில் 5 பேருக்கு நியமனம் வழங்கப்படாமை மற்றும் பள்ளிவாசல் தலைவர் பள்ளியில் வைத்து நிர்வாகிகளால் அல்லது பொதுமக்களால் தெரிவு செய்யப்படாமல் கொழும்பிலிருந்து தெரிவு செய்யப்பட்டு அனுப்பியமை தொடர்பில் நிர்வாகிகளுக்கிடையேயும் ஜமாத்தாரினருக்கிடையிலும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் அடிக்கடி ஏற்படும் வாய்த்தர்க்கங்களால் பொலிஸில் முறைப்பாடுகள் மட்டுமல்லாமல், வக்பு நியாய சபையில் (Wakfs Tribunal) இரண்டரை வருட காலமாக வழக்காடியதன் பயனாக வக்பு நியாய சபையின் தீர்ப்பினை எதிர்த்து ஒரு சாரார் மேன்முறையீட்டு நீதிமன்றம் (Court of Appeal) சென்றுள்ளமை போன்ற விடயங்களால நிர்வாக விடயங்கள் அசாதாரண நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

தற்போது வக்பு நியாய சபையின் தீர்ப்பின் அடிப்படையில் வக்பு சபையினால் 15 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நியமனத்தின் பின்னர் பள்ளிவாசலில் நிர்வாக கூட்டத்தைக் கூட்டி புதிதாக தலைவரை நியமிக்குமாறு தெரிவிக்கப்பட்டபோதிலும், இதுவரை பள்ளிவாசல் தலைவரைத் தெரிவு செய்வதற்காக முதலாவது கூட்டத்தை கூட்டாமல் இழுத்தடிப்பு செய்யப்படுகின்றமையினால் மேலும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்த அவர்கள் இந்நிலையில் மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபையை ஒருசாரார் நாடி பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுள்ளனர் எனவும் தெரிவித்தனர்.

(160)

# பெருவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் அமைந்துள்ள அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா கடந்த சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

10 தினங்கள் நடைபெறும் பெருவிழாவில் இன்று 3 ஆம் நாள் நற்கருணை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது. இப்பெருவிழா ஆலய பங்குத்தந்தை யாலோன் தலைமையில் இடம்பெற்றுவருகிறது. (35)

# பதிவிறக்கப் பெட்டகம்

காலப்பெருவெளியில்
சுவடுபதிக்கக்
கண்கள் விரும்பினாலும்
கால்கள் என்னவோ
பூமிச் சேற்றில்தானே
புதையுண்டிருக்கின்றன!
– சு.ரா.

பறவைகள்
பறக்கும் ஆகாயத்தில்
புழுக்கள்
வாழும் பூமியில்
மானுடம் மட்டும்
மயங்கும் இடம் தெரியாமல்
– விக்ரமாதித்யன்

நான்
எழுந்தபின்
என் நாற்காலியின்
வெறுமையைக் கண்டு
பயப்படுகிறேன்.
நான்
இறப்பதற்காகப்
பயப்படவில்லை
இல்லாமல்
போவதற்குத்
தான்.
– இரா.ரமேஷ்

எதையும் எதிர்கொள்
முகந் திருப்பாதே
மனஞ் சலிக்காதே-
ஆகாயம் மேவிய
பாய்ச்சலில்
தடைகள் வெறுந்
தோற்றம்.
– சு.வில்வரத்தினம்

பம்பரம்
ஆடி முடிந்த பின்னே
தலை சுற்றி விழுந்தது.
மலர் பூத்து
மணம் பரப்பிய பின்னே
சருகாகி உதிர்ந்தது.
பழம்
திரண்டு கனிந்த பின்னே
அழுகிப் போயிற்று.
இந்த வாழ்க்கை மட்டும்
வட்டத்தைச் சுற்றி வருமுன்
வழுக்கி விழுவதேன்?
– என்.ஆர்.தாசன்

காட்சியளிப்பதே தன்
கடமையென உணர்ந்தவராய்
எழுந்தார்
துயர் குழப்பமிக்க இவ்வுலகில்
தன் கடமை என்னவென்ற வெகு
யோசனைக்குப் பின் கடவுள்.
– தேவதேவன்

தற்கொலை
செய்துகொள்ளவிருப்பதாக
கடிதம் எழுதிய
ஜோசப்பிற்கு பதில்:
எப்படியும்
விரைவில்
சாகடிக்கப்பட்டு விடுவோம்
ஏன் அவசரப்படுகிறாய்?
– மனுஷ்யபுத்திரன்

இருப்போம் என்றே
நினைப்பவர்
கண்களை
இறப்பவர் அல்லவோ
திறக்கின்றார்
– சுரதா

நகையாய் வெளுத்த உடை
நலிந்ததும் கூடையிலே;
பூவையர் குழல் பூச்சரம்
வாடியதும் குப்பையிலே;
விளங்கவந்த மனைவிளக்கு
மாதமுடிவில் மூலையிலே;
வானுக்கு உயிரூட்டி
சிரித்தேகும் எரிகல்
உதிர்ந்ததும் ஒன்றுமில்லை
காற்றேன்? மூச்சேன்?
கதவை மூடு, கதவை மூடு.
– சி.மணி

குரல் நன்றாயிருக்கையில்
பாட்டை நிறுத்திவிடு
விரலுக்கு வீக்கம் வரும் முன்
வீணையை விற்றுவிடு
பரல்கள் சிதறும் முன்
சதங்கையை அவிழ்த்துவிடு
படுக்கையில் விழும் முன்
பாடையில் ஏற்றிவிடு.
– நீல.பத்மநாதன்

நமக்கொரு கடவுள் தேவை
இருட்டில் நாம்
பயத்துடன் செல்லும்போது
கடவுளை நினைக்க...
பண்டிகைகள் கொண்டாடும்போதும்
ஒரு பணியைத் தொடங்கும்போதும்
கடவுளை வழிபட...
இயற்கைப் பெண்ணின்
இனிய அழகுகளை
இரசிக்கும்போது
கடவுளைப் பாராட்ட...
நம் அறிவுக்கு எட்டாததற்கெல்லாம்
கடவுள் என முற்றுப்புள்ளி வைக்க...
துன்பத்திலிருந்து
தப்புகிறோமோ இல்லையோ
பிரார்த்தனை செய்யவேனும்
நமக்கொரு கடவுள் தேவை.
– மகாமதிவாணன்

தயங்கித் தயங்கி
அம்மாவின் கைப்பிடித்து
மெதுவாகப் படி இறங்குகிறது
குழந்தை
சீராகப் போய்க் கொண்டிருந்த
காலம்
சற்று தயங்கித் தயங்கி
முன்னகர்கிறது.
– முகுந்த் நாகராஜன்

புழுதியை
அடையாளம் வைத்துப்
புறப்பட்டாயிற்று
புழுதியின் காரணம்
தெரியாமலேயே
– பா.வெங்கடேசன்

இந்த இடத்தோடு
என்னைப் பிணைத்திருப்பவை
மயிர்க்கூச்செறியும் பேச்சுக்கள்
ஒரு இலட்சியம்ஒரு பெரும்பேருரை
இந்த இலட்சியத்தை நேசிக்க
வேண்டும் என நான்
போதிக்கப்பட்டேன்
– மஹ்மூத் தார்வீஷ்

ஆறியிரு; வாழ்க்கை அடைபடுமோ
ஓர் நிகழ்வால்?
ஆயிரம் கண் ஊற்றெடுக்கும்
ஆற்றுப் படுகையிலே
வேர்கொண்ட என் படகே
விழித்தெழுவாய், அங்கே பார்
ஓர் மனிதன் தூண்டிலுடன்
உனைத் தேடி வருகின்றான்.
– மு.பொ.

உண்மை கொடிதே, உலகில் அதனோடு
போரிட்டு வாழப் புகுந்தோம் கலங்குவதோ
வீரிட்டு அலறி விழுந்து புலம்புவதோ
பார் எட்டுத் திக்காய்ப் பரந்து கிடக்கிறது. – மஹாகவி

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (O/L) Examination model Paper

**கணிதம்**

ஆசிரியர் : A. கிரிதரன்

இல :1

### பகுதி I

01) புத்தகம் ஒன்றின் விலை ரூ. 60 உம், புற அட்டையின் விலை ரூ. 10 உம் ஆகும். இரு புத்தகங்களினதும் புற அட்டைகள் இரண்டினதும் விலை எவ்வளவு?

02) 4008 Kg, மெட்ரிக் தொன்னில் தருக.

03) $4.08 \times 0.1$ பெறுமானம் காண்க.

04) ஒருவருக்கு $\frac{1}{2}$ படி 4 பாண்களை எத்தனை பேருக்குப் பங்கிடலாம்.

05) $\frac{1}{4}$ சதவீதத்தில் தருக.

06) $\frac{1}{8} + \frac{1}{4}$ பெறுமானம் காண்க.

07) 8, 7,6,8,7,6,9,4,6 இவ் வெண்தொடரின் ஆகாரம் யாது?

08) 2, 8 இல் பெருக்கலிடை யாது?


09) $\frac{x}{2} = 3 \cdot x$ இன் பெறுமானம் காண்க.

10) 6 - 10 வகுப்பாயிடையில் நடுப்பெறுமானம் என்ன?

11) முக்கோணி ABC யில் $\hat{A}+\hat{B} = 120^0$ ஆகும். $\hat{B} + \hat{C} = 100^0$ ஆகும்.


$\hat{C}, \hat{B}$ யின் பெறுமானம் காண்க.

12) $1011_{இரண்டு} - 101_{இரண்டு}$ இன் பெறுமானத்தினைக் காண்க.

13) 


இம் முக்கோணம் இரண்டிலும் ப: கோ: ப எனும் சந்தர்ப்பத்தின் கீழ் ஒருங்கிசைவதற்கு வேண்டிய எஞ்சிய அங்க சோடியினை எழுதுக.


14) $(3x + 1)(4 - x)$ சுருக்குக.

15) 


PQSR வட்ட நாற்பக்கங்களாகும். இங்கு QSR ஐ காண்க.

16) $\sqrt{V} = x^2 - 2gh$ எனின் x ஐக் காண்க.

17) -4 , - 10, 16 ............... இக்கூட்டல் விருத்தியில்,
1) பொது வித்தியாசம் காண்க.
2) 4 ஆவது உறுப்பினைக் காண்க.

18) 


x இன் பெறுமானத்தினைக் காண்க.

19) $a + 2$ உம், $b = -3$ எனின், $\frac{3a^3}{b^2}$ இன் பெறுமானம் காண்க.

20) A யிலிருந்து B யின் திசைக்கோள் $048^0$ ஆகும். B யிலிருந்து A யின் திசைக்கோள் யாது?

21) $\log_3 243$ இன் பெறுமானத்தினைக் காண்க.

22) $x + 4y = 8$ ஆகும்.
$x + 2y = 2$ ஆகும்
தீர்க்காமல் $x + y$ இன் பெறுமானத்தினைக் காண்க.

23) கமலனுக்கும் விமலனுக்குமிடையில் 2:3 எனும் விகிதத்திலும், கமலனுக்கும் கசுனுக்குமிடையில் 3:1 எனும் விகிதத்திலும், பங்கிட்ட விகிதத்தினைக் காண்க.

24) $A = \begin{bmatrix} 1 & 2 \\ 3 & 5 \end{bmatrix}$ $B = \begin{bmatrix} -1 & 2 \\ 0 & 4 \end{bmatrix}$ தாயம் 2 B இனைக் காண்க.


25) $Y = (x - 1)^2 + 5$ இவ் வரைபின்
1) சமச்சீர் அச்சின் சமன்பாட்டினை எழுதுக.
2) இழிவுப் புள்ளியின் ஆள்கூறுகளை எழுதுக.

26) $(16)x^{\frac{-3}{4}} \left(8^{1/4}\right)^0$ பெறுமானம் காண்க.

27) 5% எளிய வட்டிக்கு ரூ.10000 ஐ கடனுக்கு பெற்ற ஒருவர் 2 வருடங்களின் பின் கடனிலிந்து மீளுவதற்கு செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

28) $\sqrt{48} + \sqrt{3}$ இன் பெறுமானம் காண்க.

29) $(1 - x)$, $x$, $(x - 1)^2$ பொது மடங்கில் சிறியதைக் கணிக்க.

30) 


1) $\frac{AE}{EB}$ இற்கு சமமாகும் விகிதத்தினை எழுதுக
2) AE இன் நீளத்தினைக் காண்க.

### பகுதி B

01) ரூ. 188000 ஆண்டுப் பெறுமானம் உடைய வீடொன்றிற்கு வரியாக ஆண்டுப் பெறுமானத்தின் 5% வீதம் அறவிடப்படுகிறது. இவ்வீடு ரூ. 8000 மாதாந்த வாடகைக்கு விடப்படுகிறது. ஒரு வருடத்திற்குமான வாடகை அறவிடப்பட்டு, அதிலிருந்து வரியினை செலுத்தி மீதிப்பணம் 25% வட்டி வழங்கும் வங்கியில் வைப்பிலிடப்படுகிறது.

1) ஆண்டு வரியினைக் காண்க
2) காலாண்டு வரியினைக் காண்க.
3) அவர் வருடத்திற்கு பெறும் மொத்த வாடகை எவ்வளவு?
4) அவர் வங்கியில் வைப்பிலிட்ட பணம் எவ்வளவு?
5) அவருக்கு வருட இறுதியில் கிடைக்கப்பெற்ற மொத்த பணம் எவ்வளவு?

02) நீர்த்தாங்கியொன்றில் 1/4 பங்கு நீரால் நிரம்பியுள்ளது. அதில் குளிப்பதற்காக 20 லீற்றர் நீர் பயன்படுத்தப்பட்ட பின் தாங்கியில் 1/12 பங்கு நீர் எஞ்சியது.

1) குளிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட நீர் நீர்த் தாங்கியின் என்ன பின்னமாகும்.
2) தாங்கியின் கொள்ளளவினைக் கணிக்க?
3) ஆரம்பத்தில் நிரம்பியிருந்த நீரின் கனவளவு யாது?

03) அமாலியிடமும் நிமாலியிடமும் பெட்டியொன்றில் சிவப்பும் கறுப்பும் பேனைகள் உள்ளன. பெட்டியிலிருந்து நிமாலி எழுமாறாக பேனையொன்றை எடுக்கும்போது அது சிவப்பாக இருப்பதற்கான நிகழ்தகவு 3/5 ஆகும். எடுத்த பேனையை நிமாலிக்கு எழுதுவதற்கு கொடுத்த அமாலி இன்னொரு பேனையை பெட்டியிலிருந்து எடுத்தாள்.

1) முதலாவது சந்தர்ப்பத்தில் கறுப்பு பேனை கிடைப்பதற்கான நிகழ்தகவு யாது?
2) இரண்டாம் சந்தர்ப்பத்தில் பேனையொன்றை எடுப்பதற்கான நிகழ்தகவினைக் காட்டும் மரவரிப்படமொன்றை வரைக.
3) மரவரிப்படம் மூலம் இரு சந்தர்ப்பங்களிலும் சிவப்பு பேனை கிடைப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.
4) குறைந்தது இரு சந்தர்ப்பங்களில் ஒரு முறையாவது கறுப்புப் பேனை கிடைப்பதற்கான நிகழ்தகவினைக் கணிக்க.

04) பாடசாலையொன்றில் புலமைப் பரிசில் வகுப்பொன்றில் அரையாண்டுப் பரீட்சையில் மாணவர்கள் கணிதப்பாடத்தில் பெற்ற புள்ளிகளின் பரம்பல் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| புள்ளிகள் | 1-10 | 11-20 | 21-30 | 31-40 | 41-50 | 51-60 | 61-70 | 71-80 | 81-90 | 91-100 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 7 | 10 | 12 | 19 | 18 | 17 | 16 | 14 | 6 | 1 |

1) இப்புள்ளிகளின் ஆகார வகுப்பு யாது?

2) 51 - 60 எனும் வகுப்பாயிடையின் நடுப்பெறுமானத்தினை எடுகொண்ட இடையாகக் கொண்டு மாணவனொருவன் பெற்ற புள்ளிகளின் இடையைக் கணிக்க.

3) 60 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையை சதவீதத்தில் தருக.

05) 18 cm ஆரையுடைய அரைக்கோளவடிவ பாத்திரமொன்றில் இலைக்கஞ்சி இடப்பட்டுள்ளது. இதை எடுப்பதற்காக 3 cm ஆரையுடைய அரைக்கோளவடிவ கரண்டி பாவிக்கப்படுகிறது. 3 cm ஆரையும் 12 cm உயரமும் உடைய கோப்பையிலிட்டு அவை விற்கப்படுகின்றன.

1) இலைக்கஞ்சி நிரப்பப்பட்ட பாத்திரம் அரைக்கோள வடிவ கரண்டியின் எத்தனை மடங்காகும்?
2) கோப்பையின் கொள்ளளவு கரண்டியின் கொள்ளளவிலும் எத்தனை மடங்காகும்?

3) முற்றாக நிரப்பப்பட்ட இலைக்கஞ்சி கோப்பையொன்று ரூ.5 உம் கருப்பட்டி ஒரு துண்டு ரூ. 1 உம் ஆகும். பாத்திரம் முற்றாக இலைக்கஞ்சியினால் நிரப்பப்பட்டுள்ளபோது அவற்றினை முற்றாக விற்றுப் பெற்ற பணம் எவ்வளவு?

(ஆரை r உடைய கோளத்தின் கனவளவு $\frac{4\pi r^3}{4}$
ஆரை r உடைய சிலின்டரின் கனவளவு $\pi r^2 h$ ஆகும்.

## பகுதி II

### பகுதி A

01) வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதற்கு அணிலுக்கு ரூ.60,0000 தேவைப்பட்டது. அவன் ரூ. 250, 000 ஐ 20% எளிய வட்டிக்கு சரஸ்வதி கம்பனியிலும், மீதிப் பணத்தினை 22% எளிய வட்டிக்கு நரேன் கம்பனியிலும் பெற்றுக்கொண்டான்.

1) கடனிலிருந்து மீளுவதற்கு அணில் சரஸ்வதி கம்பனிக்கு வருடக் கடைசியில் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

2) நரேன் கம்பனியிலிருந்து பெற்ற கடன் பணம் எவ்வளவு?

3) ஒரு வருடக் கடைசியில் நரேன் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?


4) அணில் இதே முறையில் இப்பணத்தொகையினை அதே வட்டி விகிதத்தில் கூட்டு வட்டிக்கு பெற்று ஒரு வருடத்தில் கடனிலிருந்து மீண்டார் எனின், எளிய வட்டியும் கூட்டு வட்டியும் சமமானதா? அல்லது வேறுபட்டதா? காரணம் தருக.

02) விளையாட்டு சங்கமொன்றிலிருந்த 40 மாணவர்களிடமிருந்து பெற்ற தகவல்கள் கீழே வென்வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளன.

A - (கிரிக்கெட் விளையாடும் மாணவர்கள்)

B - (கரப்பந்து விளையாடும் மாணவர்கள்)

C - (எல்லே விளையாடும் மாணவர்கள்)




1) 3 விளையாட்டுக்களிலும் பங்கு பற்றும் மாணவர்கள் எத்தனை பேர்?

2) கிரிக்கெட் விளையாடும் ஆனால் கரப்பந்து விளையாடாத மாணவர்கள் எத்தனை பேர்?
3) $(A\cap B)\cap C'$ உரித்தான பிரதேசத்தினை நிழற்றிக் காட்டுக.

4) $n(A\cap B)C'$ பெறுமானத்தினைக் காண்க.

5) இச்சங்கத்திற்கு எல்லே விளையாடும் ஒரு மாணவன் வந்தால், அவருடன் விளையாட முடியுமான மாணவர்களின் எண்ணிக்கை யாது?

03) (அ) $y = x(x+2)$ வரைபை வரைவதற்குரிய பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| x | -5 | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| y | | 8 | | 0 | -1 | 0 | | | 15 |

1) அட்டவணையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

2) x அச்சு வழியே 10 சிறிய அலகுகளை 1 எனவும், y அச்சு வழியே 10 சிறிய அலகுகளை 2 எனவும் கொண்டு மேற்படி வரைபினை வரைக.

ஆ. 1) $y = x(x+2)$ வரைபின் இழிவுப் பெறுமானம் யாது?

2) சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?

3) $y = x(x+2)$ வரைபு மறையாகும். ஒரு பெறுமான வீச்சினைக் காண்க.
4) $x^2 + 2x = 0$ மூலகங்களை வரைபினூடாகக் காண்க.

04) $A = \begin{pmatrix} 2x & 8 \\ 7 & 5x \end{pmatrix}$ $B = \begin{pmatrix} y & 4 \\ -8 & -y \end{pmatrix}$ $C = \begin{pmatrix} 13 & 20 \\ -7 & 1 \end{pmatrix}$

1) தாயம் 3 B இனை y இனூடாக எழுதுக.

2) தாயம் A + 3 B இனை (x,y இனூடாக) எழுதுக.

3) தாயம் A + 3 B = C எனின், ஊடாக ஒருங்கமை சமன்பாட்டினை கட்டியெழுப்புக. அவற்றினைத் தீர்த்து பெறுமானங்களைக் கண்ட தாயம் A. தாயம் B இனை மீள எழுதுக.

05) விளையாட்டுப் பொருட்களைத் தயாரிக்கும் குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பணிப்பெண்கள் பொம்மைக்கான ஆடைகளைத் தனித்தனியாக தயாரிக்கிறார்கள். நாளாந்தம் பொம்மைகளுக்கான ஆடை தைப்பதை கீழுள்ள அட்டவணை காட்டுகிறது.

| நா.பொ.ஆடை. த | 150-200 | 200-250 | 250-300 | 300-350 | 350-400 | 400-450 | 450-500 |
|---|---|---|---|---|---|---|---|
| பணி. பெ. எண் | 4 | 9 | 14 | 25 | 9 | 6 | 6 |

1) ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தினை எடுகொண்ட இடையாகக் கொண்டு பணிப்பெண் நாளொன்றிற்கு தைக்கும் ஆடைகளின் இடையைக் க ணிக்க.

2) இதில் எழுமாறாக பணிப்பெண் ஒருவரைத் தெரிந்தெடுத்தால் அவர் நாளாந்தம் தைக்கும் ஆடைகள் 250 அல்லது அதற்கு மேல் தைப்பவராக இருப்பதன் நிகழ்தகவினைக் கணிக்க.

06) 14.50 m உயரமுடைய கட்டடத்தின் உச்சியில் புத்தர் சிலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் அடியிலிருந்த கிடைத்தளத்தில் A எனும் புள்ளியிலிருந்து கட்டட உச்சியின் ஏற்றக்கோணம் $26^0$ ஆகும். புத்தர்சிலை உச்சியின் ஏற்றக்கோணம் $38^0$ 12' ஆகும்.


அ) மேற்படி தரவுகளை பரும்படி படத்தில் குறிக்க.
ஆ) திரிகோண கணித அறிவினைப் பயன்படுத்தி,
i) கட்டட அடியிலிருந்து A இற்கு உள்ள தூரம்?
ii) புத்தர் சிலையின் உயரம் என்ன?

## பகுதி III

07) i) AB = 6 cm $A\hat{B}C = 45^0$, BC = 8.5cm ஆகுமாறு முக்கோணி ABC ஐ நிர்மாணிக்குக.
ii) பக்கம் AB ஐ A இல் தொடுமாறு $A\hat{B}C$ இரு கூறாக்கியின் மீது மையம் அமையுமாறு வட்டத்தினை அமைக்க.
iii) B யிலிருந்து வட்டத்திற்கு தொடலியை அமைக்க. (BA தவிர) BD எனப் பெயரிடுக. BD யின் நீளம் எவ்வளவு?


08) 1 -7 வரை இலக்கமிடப்பட்டுள்ள அட்டைகள் மேசைமீது புரட்டி வைக்கப்பட்டுள்ளது.
அ) அதில் ஒன்றை எழுமாறாக எடுத்தால் அது இரட்டை எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
ஆ) முதலில் எடுத்த அட்டையை கையில் வைத்துக்கொண்டு இரண்டாவது அட்டை எடுக்கப்படுகிறது. மேற்படி தகவல்களை நெட்காட்டி வரைவில் காட்டுக. அதனூடாக,
i) எடுக்கும் அட்டை இரண்டும் இரட்டை எண்ணாதல்.
ii) அட்டைகள் இரண்டிலும் உள்ள எண்கள் மூன்றிலும் குறைதல்.
iii) இரண்டு அட்டைகளினதும் கூட்டுத்தொகை 10 ஆதலின் நிகழ்தகவினைக் கணிக்க.

09) வட்டத்தின் வில்லினால் வட்டத்தின் மையத்தில் எதிரமைக்கப்படும் கோணம் அது வில்லினால் பரிதியின் எஞ்சிய பகுதியின் மீது எதிரமைக்கப்படும் கோணத்தின் இரு மடங்கு என நிறுவுக.




O மையமாகும். AC நேர்கோடாகும். காரணம் காட்டுவதன் ஊடாக,
i) x இன் பெறுமானம் யாது?
ii) y இன் பெறுமானம் யாது?
iii) $A\hat{B}C$ பெறுமானத்தினைக் காண்பதற்கு நிறுவின தேற்றத்தினைப் பயன்படுத்தும் விதத்தினை விபரிக்க.

10) சிலிண்டர் ஒன்றையும் கூம்பு ஒன்றையும் இணைத்து செய்யப்பட்டுள்ள வெற்றுப் பாத்திரத்திற்கு நீர் நிரப்பியுள்ள விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது.




இங்கு சிலிண்டரின் ஆரை 7 cm ஆகும்.

r ஆரையும் h உயரமுடைய கூம்பின் கனவளவு $\frac{1}{3}\pi r^2 h$

சிலின்டரின் கனவளவு $\pi r^2 h$

i) இதற்கு ஊற்றப்பட்டுள்ள நீரின் கனவளவு யாது?

ii) இந்நீர் கனவுரு வடிவ பாத்திரம் ஒன்றிற்கு ஊற்றப்படுகிறது. அதன் நீளம் 30 cm, அகலம் 21 cm ஆகும். கனவுருவின் எவ்வளவு உயரத்திற்கு நீர் நிரம்பியுள்ளது?

11) i) $x = 3.08$ $y=19.97$ $p=9.01$ எனின்,

$A = \frac{x^2 y}{\sqrt{p}}$ மேற்படி பெறுமானங்களை பிரதியிடுக.

ii) $A = \frac{x^2 y}{\sqrt{p}}$ இங்கு A இற்கான கிட்டிய பெறுமதியை மதிப்பிடுக.

iii) மேற்படி பெறுமானங்களைப் பிரதியிட்டு மடக்கை அட்டவணையைப் பாவித்து A இன் பெறுமதியைக் கணிக்க.

12) அ)

i) 5 இற்கும் 26 இற்குமிடையிலான கூட்டலிடைகள் 2 எழுதுக.

ii) அவ்விருத்தியின் 11 ஆம் உறுப்பு யாது?

iii) முதல் 11 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?

ஆ $T_n = 3 \times 2^{n-1}$ இனால் n ஆவது உறுப்பு தரப்படுகிறது.

i) இங்கு முதல் 3 உறுப்புக்களையும் எழுதுக.

ii) இது எவ்வகை விருத்தியாகும்? காரணம் தருக.


iii) இங்கு 381 எத்தனையாம் உறுப்பாகும்?

இல :2

## பகுதி I


01) முறைமையில்லா பின்னத்தினைத் தெரிக.

1) $\frac{7}{8}$ 2) $\frac{1}{9}$ 3) $1\frac{1}{5}$ 4) $\frac{8}{3}$

02) 

நீர் நிரம்பியுள்ள பகுதி நிழற்றப்பட்டுள்ளது. அதனை மில்லி மீற்றரில் தருக.

03) வரிசை (3 x 2) ஆகும் தாயமொன்றினை எழுதுக.

04) 

b இற்கு ஒன்றுவிட்ட கோணம் எது?

05) இரு சமபக்க முக்கோணியொன்றில் சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது?

06) 5 மனிதர்கள் 8 நாட்களில் செய்து முடிக்க முடியுமான வேலையொன்றினை 10 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?

07) $\log_2 8$ பெறுமானத்தினைக் காண்க.

08) $\frac{2y}{3}$ இன் குணகம் யாது?

09) $70^0$ இன் நிரப்புகோணம் எவ்வளவு?

10) $x^2 + 10x$ பூரண இலக்கமாவதற்கு சேர்க்க வேண்டிய எண் யாது?

11) $(-2)^3$ இனை நேர் அடுக்காக எழுதிக் காட்டுக.

12) $y = 3x - 1$ நேர்கோட்டின்,


i) y அச்சினை வெட்டும் ஆள்கூறுகளை எழுதுக.

ii) இவ்வரைபின் படித்திறன் யாது?

13) ரூ. 55 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருளொன்று 10% இலாபத்திற்கு விற்கப்பட்டது.

i) இலாபம் எவ்வளவு?

ii) விற்ற விலையைக் காண்க.

14) 

O மையமாகும்.
AOB பெறுமானம் யாது?
ACB பெறுமானம் யாது?

15) $y = (x-1)^2 + 5$ எனும் சமன்பாட்டின் வரைபினை y அச்சு வழியே 5 அலகுகள் கீழ் நோக்கி நகர்த்துவதன் மூலம் கிடைக்கும் வரைபின் சமன்பாட்டினை எழுதுக.

16) $105^2 - 95^2$ காரணி அறிவைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க.

17) $x = \frac{3}{2}$, $x = -1$ இம் மூலகங்களைக் கொண்ட சமன்பாட்டினை எழுதுக.

18) புத்தகமொன்றின் விலை பேனையொன்றின் விலையின் இருமடங்கிலும் ரூ.10 அதிகமாகும். புத்தகத்தின் விலைக்கும் பேனையொன்றின் விலைக்கு மிடையிலான வித்தியாசம் ரூ.22 ஆகும். புத்தகத்தின் விலை ரூ. x உம், பேனையொன்றின் விலை ரூ. y எனக் கொண்ட ஒருங்கமை சமன்பாடுகள் இரண்டு எழுதுக.

19) 24, 36 என்ற இரு எண்களையும் வகுக்க முடியுமான மிகப் பெரிய எண் எது? இது எவ்வாறு அழைக்கப்படும்?

20) $3\frac{1}{2} - 3$ இன் $\frac{1}{6}$ சுருக்குக.

21) சதுரமொன்றின் மூலை விட்டமொன்றின் நீளம் $\sqrt{18}$ ஆகுமெனின், அதன் பரப்பளவினைக் கணிக்க.

22) ரூ. 10 பங்குகளை ரூ. 12 படி கொள்வனவு செய்வதற்கு ரூ. 48000 வழங்கிய ஒருவனுக்கு வருடத்திற்கு 20% பங்கு லாபம் கிடைத்தது.

1) அவர் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கையைக் காணிக்க.

2) அவர் வாங்கிய பங்குகளின் பெயர் மாத்திரைப் பெறுமானம் எவ்வளவு?

23) 7 cm ஆரையுடைய சில்லு 11 m பயணம் செய்ய சுழல வேண்டிய சுற்றுக்களின் எண்ணிக்கையைக் கணிக்க.


24) $\bar{2}.9462 \times 4$ சுருக்குக.

25) $\lg 3 = 0.477$ எனின், $\lg 27$ இன் பெறுமானம் காண்க.


26) $3\sqrt{50} \div \sqrt{18}$ பெறுமானம் காண்க.

27) $4(x-3) + 3(x-1)$ சுருக்குக.

28) $2^{x+1} = 32$ எனின், x இன் பெறுமானம் காண்க.

29) 

இதன் சுற்றளவினைக் கணிக்க.

30) 

பரப்பளவில் சமனான இரு முக்கோண சோடிகளைப் பெயரிடுக.

## பகுதி B


01) தாங்கியொன்று $\frac{2}{3}$ பங்கு எண்ணெயினால் நிரம்பியுள்ளது. அத்தாங்கியில் இன்னும் $\frac{1}{4}$ பங்கிற்கு எண்ணெய் நிரப்பப்படுகிறது. இப்போது தாங்கியிலுள்ள எண்ணெயின் $\frac{3}{11}$ அளவிலை வெளியேற்றியபோது 40l வெளியேறியது.

i) தாங்கிக்கு நீர் நிரப்பிய போது அங்கிருந்த எண்ணெயின் கனவளவு முழுத்தாங்கியின் என்ன பின்னமாகும்?

ii) வெளியேற்றிய எண்ணெயின் கனவளவினை பின்னமாகத் தருக.

iii) தாங்கியின் கொள்ளளவு எத்தனை லீற்றர்?

iv) தாங்கியின் ஆரம்பத்தில் நிரம்பியிருந்த எண்ணெயின் அளவினை லீற்றரில் தருக.




S - சிங்களம்
J - யப்பான்
T - தமிழ்

குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தில் உள்ள பணியாட்களின் மொழியறிவினை பரீட்சித்த போது பெற்ற தகவல்கள் வென்வரிப் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

i) புற நீக்கம் சோடி தொடைகளை எழுதுக.

ii) பரீட்சித்த மொத்த பணியாட்களின் எண்ணிக்கை யாது?

iii) இரண்டு மொழிகளையும் பேசும் பணியாட்களின் எண்ணிக்கை யாது?


iv) ஏதாவது ஒரு மொழியினை மட்டும் பேச முடியுமான பணியாட்களின் எண்ணிக்கை யாது?

iv) தமிழ்மொழி மட்டும் பேசும் ஒருவர் இந்நிறுவனத்திற்கு ஒரு வேலையைச் செய்து கொள்ள வருவார் எனின், அவருக்கு உதவி புரியக்கூடிய அவருடன் உரையாடக்கூடிய பணியாட்களின் நிகழ்தகவினைத் தருக.

இவ் வினாத்தாளுக்கான விடைகள் கல்விமுரசில் எதிர்வரும் சனிக்கிழமை (29.09.2012) வெளிவரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# பொருளாதார சீர்திருத்த தாமதம் மம்தா பானர்ஜியே காரணம்

## அமைச்சர் குலாம்நபி ஆசாத் குற்றச்சாட்டு



(ஸ்ரீநகர்)

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் தாமதமானதற்கு திரிணாமூல் காங்கிரஸ் கட்சிதான் காரணம் என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் குற்றம்சாட்டியுள்ளார்.

மத்திய அரசு கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. இதே நிலை தொடர்ந்தால் நிலைமை மேலும் மோசமாகும் என்பதால்தான், மத்திய அரசு டீசல் விலை உயர்வு மற்றும் மானிய விலை, சிலிண்டருக்குக் கட்டுப்பாடு மற்றும் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீடு, ஆகிய முடிவுகளை எடுத்தது. திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் கடும் எதிர்ப்புக் காரணமாகவே இத்தகைய பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் தாமதமாகி வந்தன.

இந்த முடிவுகளை எடுக்காமல் இருந்திருந்தால், கடந்த 1991இல் ஏற்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டிருப்போம் என்பதை பிரதமர் மன்மோகன் சிங் சுட்டிக்காட்டி உள்ளார். அதாவது, அப்போது ஏற்பட்ட கடுமையான பெருளாதார நெருக்கடியைச் சமாளிக்க கையிருப்பில் இருந்த தங்கத்தை அடகு வைக்க நேர்ந்தது. கடந்த ஆண்டிலேயே சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்க மத்திய அரசு முடிவு செய்தது. அப்போது திரிணமூல் காங்கிரஸ் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால், இந்த முடிவை மத்திய அரசு தற்காலிகமாக ஒத்தி வைத்தது குறிப்பிடத்தக்கது.

மத்திய அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு தருபவர்களையும் கணக்கில் கொண்டால் 300இற்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் ஆதரவு உள்ளது. 545 உறுப்பினர்களைக் கொண்ட மக்களவையில் பெரும்பான்மைக்கு 273 உறுப்பினர்கள் ஆதரவு தேவை. எங்களுக்கு அதற்கும் அதிக உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதால் ஆட்சிக்கு ஆபத்து இல்லை என்றார் அவர்.

# மலையாள நடிகர் திலகன் மரணம்



(திருச்சூர்)

பிரபல மலையாள நடிகர் திலகன் மரணமானார். 77 வயதான இவர் 300 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். பத்மஸ்ரீ பட்டம் பெற்ற இவர் தமிழில் சத்ரியன், மேட்டுக்குடி, அலிபாபா உட்பட பல படங்களில் நடித்துள்ளார். கடந்த ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி திலகனுக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டு திருச்சூர் அருகே தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. திலகன் உடல் நிலை கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்து இருந்தனர். மாரடைப்புடன் திலகனுக்கு பக்கவாத நோயும் ஏற்பட்டு அவரது மூளை நரம்புகளும் பாதிக்கப்பட்டு இருந்தன.

மருத்துவர்கள் அவருக்கு செயற்கை சுவாசக் கருவிகள் பொருத்தி சிகிச்சை அளித்து வந்தார்கள். இந்த நிலையில் நேற்று அதிகாலை சிகிச்சை பலனளிக்காமல் நடிகர் திலகன் மரணமடைந்தார்

இந்தியச் செய்திகள்

# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்; ரயில்வே துறையைக் கோருகிறது தி.மு.க

(புதுடில்லி)

ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்து திரிணாமூல் காங்கிரஸ் வெளியேறியதால் அமைச்சரவை மாற்றத்தில் இடம் கிடைக்குமா? என்று கூட்டணிக் கட்சிகள் ஆவலுடன் உள்ளன. குறிப்பாக திரிணாமூல் காங்கிரஸ் வசம் இருந்த ரயில்வே துறையை தி.மு.க. கோருவதாக டில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய அரசில் 3 கபினட் அமைச்சர்களையும் 4 இணை அமைச்சர்களையும் தி.மு.க. பெற்றிருந்தது. அக்கட்சியைச் சேர்ந்த ஆ. ராசா, தயாநிதி மாறன் ஆகியோர் அடுத்தடுத்து மத்திய அமைச்சர் பதவிகளை இராஜிநாமா செய்தனர். ஆனால் தங்கள் கட்சியில் வேறு யாரையும் அமைச்சர்களாக நியமிக்கும்படி தி.மு.க. தலைமை கேட்கவில்லை. இதனால் கபினட் அமைச்சராக மு.க. அழகிரி மட்டுமே இருந்து வருகிறார்.



தற்போது திரிணாமூல் விலகியிருக்கும் நிலையில், தி.மு.க., அமைச்சர் பதவிகளைக் கோரக்கூடும் எனத் தெரிகிறது. டி.ஆர்.பாலு, டி.கே.எஸ். இளங்கோவன், ஏ.கே.எஸ். விஜயன், ஹெலன் டேவிட்சன், வசந்தி ஸ்டான்லி ஆகியோரில் ஒருவருக்கு அமைச்சர் பதவி கிடைக்கலாம் என்கின்றன அறிவாலய வட்டாரங்கள். தி.மு.க. வைப் போல தேசியவாத காங்கிரஸ் கட்சியும் கூடுதல் அமைச்சர் பதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

அதே நேரத்தில் ராகுல் காந்தியோ தமிழக காங்கிரஸை சேர்ந்த மேலும் ஒருவருக்கு அமைச்சர் பதவி கொடுக்க நெருக்கடி கொடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

# கின்னஸில் இடம்பிடித்த லக்னோ பாடசாலை

உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள நகர பாலர் பாடசாலை உலகிலேயே மிகப் பெரிய பாடசாலையாக கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கின்னஸ் புத்தகத்தின் 57ஆவது மற்றும் 2013ஆம் ஆண்டுக்கான புத்தகத்தில் இந்தத் தகவல் இடம்பெற்றுள்ளது. அதன்படி 2010 மற்றும் 2011ஆம் ஆண்டு கல்வியாண்டின் போது இந்தப் பாடசாலையில் ஓகஸ்ட் 9, 2010ஆம் நாளைய கணக்குப்படி 39,437 மாணவர்கள் பயின்றனர்.

300 ரூபா கடனாகப் பெற்று 5 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட இந்தப் பாடசாலையில் நடப்பு கல்வி ஆண்டில் 45 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கல்வி கற்பதாக பாடசாலையின் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

1959ஆம் ஆண்டு ஜகதீஷ் காந்தி என்பவர் தன்னுடைய மனைவி பார்தி காந்தியுடன் இணைந்து, 300 ரூபா கடன் பெற்று மாணவர்களுடன் இந்தப் பாடசாலையைத் தொடங்கினார்.

2002ஆம் ஆண்டு இந்தப் பள்ளிக்கு யுனெஸ்கோ அமைப்பின் அமைதி கல்வி விருது வழங்கப்பட்டது. உலகிலேயே இந்த விருது பெற்ற ஒரே பாடசாலை இது மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

# பீகார் முதல்வருக்கு எதிராக செருப்பு காட்டி போராட்டம்



(மதுபானி)

பீகார் முதல்வர் நிதிஷ்குமாருக்கு எதிராக ஒப்பந்த ஆசிரியர்கள் செருப்பைக் காண்பித்து நடத்திய போராட்டத்தால் பரபரப்பு ஏற்பட்டது.

பீகார் மாநிலத்தில் மதுபானி என்ற பகுதியில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள பீகார் முதல்வர் நிதிஷ்குமார் சென்றிருந்தார். அப்போது அந்தப் பகுதியில் திரண்டிருந்த ஒப்பந்த ஆசிரியர்கள், தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தியபடி செருப்புகளைத் தூக்கிக் காண்பித்தனர்.

நிதிஷ்குமாருக்கு ஆசிரியர்கள் இப்படி செருப்பு மரியாதை கொடுப்பது ஒன்றும் முதல் முறையும் அல்ல! ஏற்கெனவே மூன்று மாவட்டங்களில் இது போன்ற செருப்பு மரியாதை ஆசிரியர்களால் கொடுக்கபப்ட்டிருக்கிறது.

ஆனால் நிதிஷ்குமாரோ, எதிர்க் கட்சிகள்தான் ஆசிரியர்களைத் தூண்டிவிடுகின்றன என்று கூறியிருக்கிறார்.

அப்படி என்ன ஒப்பந்த ஆசிரியர்கள் கோருகின்றனர் இதர ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் கோரிக்கையாம்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# மின் பாவனைக்கு கடும் கட்டுப்பாடு



தமிழகத்தில் மின்வெட்டு கடுமையாக்கப்பட்டதை அடுத்து, தமிழ்நாடு மின்சார பகிர்மானக் கழகம் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. மின்சாரம் பயன்படுத்துவது தொடர்பாக உயர்மட்டப் பாவனையாளர்களுக்கு மட்டுமே இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

நட்சத்திர ஹோட்டல்களில், மாலை 6 மணிக்கு மேல் மின்பிறப்பாக்கிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பது உட்பட, பல்வேறு கட்டுப்பாடுகளை தமிழ்நாடு மின்சார பகிர்மானக் கழகம் விதித்துள்ளது.

மேலும், மாலை 6 மணிக்கு மேல் அலங்கார விளக்குகள், விளம்பரப் பலகை விளக்குகள் ஆகியவற்றுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவதை அனைத்து தரப்பினரும் தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு சேமிக்கப்படும் மின்சாரத்தைக் கொண்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு மாநிலங்களில் பெருவெள்ளம்; 16 பேர் பலி

இந்தியாவின் வட, கிழக்கு மாநிலங்களான அஸாம், சிக்கிம் பகுதிகளில் ஏற்பட்டுள்ள திடீர் வெள்ளப்பெருக்கில் குறைந்தது 16 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் பலர், பின்தங்கிய எல்லைப் பிராந்தியமொன்றில் தற்காலிக முகாம்களில் தங்கியிருந்த கட்டடப் பணியாளர்கள் என்று கூறப்படுகிறது.

பல நாட்களாக நீடிக்கின்ற பருவமழை காரணமாக ஏற்பட்டுள்ள மண்சரிவுகளால் பிரதேசத்தில் பல வீதிகள் மூடப்பட்டுள்ளன.

அஸாம் மாநிலத்தில் வெள்ளநீர் மட்டம் உயர்ந்து வரும் பல கிராமங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெரும் எண்ணிக்கையிலானோர் வீடுகளை விட்டு வெளியேற நேர்ந்துள்ளது. பல பகுதிகளில் வெளித்தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

நிர்க்கதியாகியுள்ள மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை விநியோகிக்கும் பணியில் ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.





அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் விரைவில் நடக்க உள்ளது. தற்போதைய ஜனாதிபதி ஒபாமா, மீண்டும் களத்தில் குதித்துள்ளார். இதற்காக, சந்தோஷதுள்ளலுடன்பிரசாரத்தை தொடக்கியுளளார்.மில்வாகி பகுதியில் நடந்த பிரசாரத்தில், ஓடிச்சென்று மேடையில் ஏறினார். இந்த ஓட்டம், அதிகாரத்தைப் பிடிக்கும் வரை தொடருமோ?

# சிரிய புரட்சிப்படைத்தலைவர்கள் நாடு திரும்பியதாக அறிவிப்பு

உலகச் செய்திகள்

சிரிய ஜனாதிபதி பஷார் அல்-அஸாத்துக்கு எதிராக போரில் ஈடுபட்டு வரும் அரசு எதிர்ப்புப் படையின் தலைவர்கள், தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குத் திரும்பி வந்துள்ளதாக அறிவித்துள்ளனர். முன்னதாக அவர்கள் துருக்கி உள்ளிட்ட அயல் நாடுகளிலிருந்து செயற்பட்டனர்.

அரசு எதிர்ப்புப்படைத் தளபதி ரியாத் அல்-அஸத் கூறியது: எங்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிக்கு எங்கள் படைத் தலைவர்கள் வந்துள்ளனர். போர் தொடர்பான கட்டளைகளை அவர்கள் நேரடியாக அளித்து வருகின்றனர். சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸை இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவிக்க கடும் தாக்குதலைத் தொடங்கியுள்ளோம் என்றார்.

இதற்கிடையே வத்திக்கானுக்குச் சென்ற சிரிய அரசு எதிர்ப்புக் குழு ஒன்றைச் சேர்ந்த தலைவர் ஜோர்ஜ் சாப்ரா, அங்கு போப் 16ஆவது பெனடிக்ட்டை சந்தித்துப் பேசினார். சிரியாவில் கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக ஜனாதிபதி



பஷார் அல்-அஸாத் செயற்படுவதாக அவர் புகார் தெரிவித்தார். இந்தச் சந்திப்பின்போது, மற்றொரு அரசு எதிர்ப்புக் குழுவைச் சேர்ந்த அப்துல் பஸ்ஸத் சய்தா என்பவரும் உடனிருந்தார்.

இதேவேளை அலெப்போ, தாரா உள்ளிட்ட பகுதிகளில் இராணுவத்தினர் கடும் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் மட்டும் 220 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# படத்தயாரிப்பாளரை கொல்ல ஒரு இலட்சம் டொலர் சன்மானம்

## – பாகிஸ்தான் அமைச்சர் அறிவிப்பு



(இஸ்லாமாபாத்)

இஸ்லாம் மார்க்கத்தை அவமதிக்கும் அமெரிக்க குறுந் திரைப்படத்தின் தயாரிப்பாளரை படுகொலை செய்பவருக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் சன்மானம் வழங்கப்படும் என பாகிஸ்தானின் அமைச்சர் ஒருவர் உறுதியளித்துள்ளார்.

பாகிஸ்தானின் இரயில்வே துறை அமைச்சரான குழாம் அஹமட் பிலோர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் காலத்திலும் இத்தகைய திரைப்படங்களைத்தயாரிப்போரை படுகொலை செய்வோருக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களை சன்மானமாக வழங்கத் தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கருத்துச் சுதந்திரம் உள்ள போதிலும் மதத்தலைவர்களுக்கு இழிவு ஏற்படுவதை தடுப்பதற்கான சட்டங்களை வகுக்க வேணடிய தேவை உள்ளதாக பாகிஸ்தான் இரயில்வே துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்

அவ்வாறில்லாவிடின் எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.


சர்ச்சைக்குரிய திரைப்படத்தின் தயாரிப்பாளரை படுகொலை செய்வதற்கு உதவுமாறு பாகிஸ்தான் இரயில்வே துறை அமைச்சர் தலிபான் போராளிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும் பாகிஸ்தான் இரயில்வே துறை அமைச்சரின் இந்தக் கருத்துக்களை பாகிஸ்தான் பிரதமரின் அலுவலகம் கண்டித்துள்ளது.

இது,குறித்த அமைச்சரின் தனிப்பட்ட கருத்தே தவிர பாகிஸ்தான் அரசாங்கத்தின் நிலைப்பாடல்ல என பாகிஸ்தான் பிரதமர் அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் இரயில்வே துறை அமைச்சர் குலாம் அஹமட் பிலோர் பாகிஸ்தான் ஆளும் கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் ஏ.என். கட்சியை பிரதிநித்துவப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது

# நைஜீரிய தேவாலயத்தில் தற்கொலைத் தாக்குதல்



நைஜீரிய நாட்டில் பௌசி நகரில் செயின்ட் ஜோன்ஸ் கத்தோலிக்க தேவாலயத்தில் நேற்று முன்தினம் வழிபாடு நடந்து கொண்டிருந்தபோது மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 2 பேர் இறந்தனர், 48 பேர் காயமடைந்தனர்.

போக்கோ ஹாரம் என்ற இஸ்லாமிய தீவிரவாத அமைப்பு இதுபோன்ற தாக்குதல்களை நடத்தி வருகிறது. தேவாலயத்தில் கார் நிறுத்தும் பகுதியில் இந்தக் குண்டு வெடித்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். நைஜீரியாவில் தேவாலயங்களில் தாக்குதல்களை நடத்துவது அண்மைக் காலமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேருந்து நிலையத்தில் திடீரென புகுந்தது கார்

## 7பேர் பலி மூவர் படுகாயம்



ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் பேருந்துகள் தரிப்பு நிலையப் பகுதியில் நின்று கொண்டிருந்த பயணிகள் கூட்டத்தில் மின்னல் வேகத்தில் வந்த கார் புகுந்து மோதியது. இதில் 7 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாகப் பலியானார்கள். மேலும் மூவர் படுகாயம் அடைந்தனர். இந்த விபத்து தொடர்பாக காரை ஓட்டி வந்த நபரை பொலிஸார் கைது செய்து விசாரித்தபோது அவர் மதுபோதையில் மணிக்கு 200 கிலோ மீற்றர் வேகத்தில் காரைச் செலுத்தியது தெரியவந்தது. இச்சம்பவம் குறித்து பொலிசார் மேலும் கூறுகையில், புதிய சட்டத்தின்படி இவருக்கு 9 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கும். சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் எனத் தெரிவித்தனர்.

# அமெரிக்க வெளியேற்றத்தை அடுத்து சீனாவுடன் கைகோர்க்கும் ஆப்கான்

ஆப்கானிஸ்தானில் அல் கொய்தா, தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்கும் பணியில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் ஈடுபட்டுள்ளன.

இவர்கள் புதிதாக தெரிவு செய்யப்படும் இராணுவ வீரர், பொலிஸாருக்கு பயிற்சிகளும்



அளித்து வருகின்றனர். இந்நிலையில் எதிர்வரும் 2014ஆம் ஆண்டுடன் நேட்டோ படைகள் ஆப்கானை விட்டு முழுமையாக வெளியேற முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து தங்கள் இராணுவம், பொலிஸ்துறைக்கு நிதியுதவி பெறும் முயற்சியில் ஆப்கான் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதற்கிடையே சீனாவின் உள்நாட்டு பாதுகாப்பு உயர் அதிகாரியும், கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டக் குழு உறுப்பினருமான ஹோவ் யாங்காங் திடீரென்று ஆப்கானிஸ்தான் சென்றார்.

அங்கு காபூல் நகரில் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமித கர்சாயை, சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதன் பின்னர் பாதுகாப்பு, பொருளாதாரம் தொடர்பான ஒப்பந்தங்களில் இருவரும் கையெழுத்திட்டனர். ஆனால் இந்த ஒப்பந்தங்கள் குறித்து விரிவான தகவல் வெளியிடப்படவில்லை.

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த சுமார் 1.இலட்சம் பொலிஸாருக்கு தற்போது நேட்டோ படையினர் பயிற்சி அளித்து வருகிறார்கள். நேட்டோ படைகள் வாபஸ் ஆன பிறகு இந்த புதிய ஒப்பந்தம் மூலம் சீனா உதவி வழங்கும் எனத் தெரிகிறது.

கடந்த 1966ஆம் ஆண்டிற்குப் பிறகு சீன உயர் அதிகாரி ஒருவர் ஆப்கானிஸ்தானுக்குச் சென்றிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

# கொலம்பிய சிறையில் அழகிப் போட்டி பெண் கைதிகள் தீவிர பயிற்சியில்



(பகோடா)

கொலம்பிய நாட்டுத்தலைநகர் பகோடாவில் உள்ள பெண்கள் சிறையில் அழகிப் போட்டி நடத்தப்படவுள்ளது. அதில் ஏராளமான பெண் கைதிகள கவர்ச்சிகரமான உடையில் பூனை நடை போட்டும், நடனமாடியும் கலக்கத் தயாராகி வருகின்றனர். இவர்கள் அனைவருமே போதைப் பொருள் கடத்தல், திருட்டு, கொலை உள்ளிட்ட வழக்குகளில் கைதாகி சிறைவாசம் அனுபவித்து வருபவர்கள். வெளியில் நடக்கும் அழகிப் போட்டிகளுக்குச் சற்றும் குறைச்சல் இல்லாமல் படு கவர்ச்சிகரமாகவும், ஒய்யாரமாகவும் பெண் கைதிகள் நடை போட்டு அசத்த தயாராகி வருகிறார்கள்,. தற்போது தீவிர பயிற்சி வகுப்புகள் இவர்களுக்காக நடத்தப்பட்டு வருகிறது.

பகோடாவில் உள்ள எல் புளுயன் பெண்கள் சிறையில்தான் இந்த அழகிப் போட்டி நடை பெறும். இங்கு ஆண்டுதோறும் பெண் கைதிகள் மறு வாழ்வுத் திட்டத்தின் கீழ் அழகிப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. இந்தச் சிறையில் மொத்தம் 9 பிளாக்குகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் அதிகபட்சம் 250 பெண் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு பிளாக்கிலிருந்தும் ஒரு பெண் கைதி இறுதிச் சுற்றுக்குத் தேர்வு செய்யப்பட்டு கடைசியில் இறுதிப் போட்டி நடைபெறும்.

இந்தப் போட்டி ஒரு நாள், இரண்டு நாள் நடக்கும் நிகழ்ச்சியாக இல்லாமல், கிட்டத்தட்ட பல வாரங்களாகவே இதற்கான தகுதிப் போட்டிகள், பயிற்சி உள்ளிட்டவை நடைபெறுவது வழக்கம். இதனால் இப்போட்டிகள் தற்போது கொலம்பிய மக்களை வெகுவாகக் கவரும் அழகிப் போட்டியாக மாறியுள்ளது.

செப்ரெம்பர் மாதத்தில் இந்தப் போட்டிகள் ஆண்டுதோறும் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்து. தற்போது போட்டிக்காக அனைத்துப் பெண் கைதிகளும் தீவிர பயிற்சியில் உள்ளனர்

# வறிய குடும்பங்களுக்கு பச்சிலைப்பள்ளியில் காணி

## 500 குடும்பங்களுக்கு வாய்ப்பு



பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வாழ்கின்ற காணியற்ற ஐந்நூறு வரையான குடும்பங்களுக்கு இப்பகுதியிலேயே காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கான செயற்பாடுகள் இவ்வருட இறுதிக்குள் ஆரம்பமாகும் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மீளமைக்கப்பட்ட பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகங்களில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக கட்டடமே முதன்முதலாக மீள்நிர்மாணம் செய்யப்பட்டு மக்களின் சேவைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது இம்மக்களுக்கு கிடைத்துள்ள வரப்பிரசாதமென்றே கூறமுடியும். அத்தோடு இச்செயலகம் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்கின்ற நிர்வாக செயற்திறனுடன் இயங்கவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு எனக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிவிரைவான அபிவிருத்தியை எட்டிவரும் பிரதேச செயலர்பிரிவும் இப் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவு என்பதை எவராலும் மறுக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

அத்தோடு இப்பகுதி மக்களின் ஏனைய தேவைகளையும் நிறைவு செய்வதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் இந்நாட்டின் மேன்மை தங்கிய ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறவுள்ள கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மக்களின் ஏனைய தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகள் உருவாக்கம் பெறும். குறிப்பாக மீள்குடியேற்றத்தின் பின்னரான அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்பு மக்கள் எதிர்கொள்ளும் குடிநீர்ப் பிரச்சினை போக்குவரத்து, வீதிப்புனரமைப்பு, வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற பல விடயங்கள் முன்னுரிமைப் படுத்தப்பட்டு தீர்வுகள் எட்டப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

இதேவேளை பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் வாழ்கின்ற காணியற்ற சுமார் ஐந்நூறுவரையான குடும்பங்களுக்கு இப்பகுதியிலேயே காணிகளை வழங்குவதற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் உறுதுணையுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அச்செயற்பாடுகள் இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் அத்தோடு காணிகளைப் பெறும் மக்களுக்கு வீட்டுவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# படையினர் மீது தாக்குதல் சந்தேகநபருக்கு விடுதலை

(திருநெல்வேலி)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் யாழ். மேல நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

மூன்றாம் கட்டை, ஆனைக் கோட்டை மானிப்பாயைச் சேர்ந்த புலேந்திரன் கஜேந்திரன் (வயது-31) என்பவர் 15.05.2009 இல் ஓமந்தையில் வைத்து பயங்கரவாதப் புலனாய்வுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக இணைந்து ஆயுதப் பயிற்சி பெற்று இலங்கை இராணுவத்திற்கும், கடற்படைக்கும் எதிராகத் தாக்குதல் மேற்கொண்டதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

உயர் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு இவரால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் இவ்வழக்கில் இவருக்கு எதிரான சான்றாக இருந்தது. அவ்வாக்கு மூலத்தை ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கடந்த 6 ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் நிராகரித்துத் தீர்ப்பளித்திருந்தார்.

எதிரிக்கெதிராக வேறு சான்றுகள் உள்ளனவா என்பதை ஆராயவதற்காக நேற்றுவரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந் தது. நேற்று வழக்கு மேல் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிரிக்கெதிராக வேறு சான்றுகள் இல்லை என அரச தரப்பு சட்டத்தரணி தெரிவித்ததையடுத்து எதிரியை விடுதலை செய்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

எதிரி சார்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸ்சும், அரசு தரப்பில் அரச சட்டவாதி நளினி கந்தசாமியும் ஆஜராகினர். (137)

# மன ஆரோக்கியம்; விசேட சொற்பொழிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கந்தையா வீதியில் அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சுகவாழ்வும் மன ஆரோக்கியமும் என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

சொற்பொழிவை உலக சுகாதார நிறுவன இணைப்பாளரும் யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை விரிவுரையாளருமான டாக்டர் க.சிவராஜா நிகழ்த்தவுள்ளார். இச்சொற்பொழிவில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது. (11)

# கட்டட அனுமதிக்காக காத்திருக்கும் மக்கள்

(ஆனைக்கோட்டை)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் குடியிருப்பாளர்களில் வீடு, மதில், கட்டடங்கள் கட்டுவதற்குரிய அனுமதி பெறுவதற்கு விண்ணப்பங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டும் இதுவரை அனுமதிப் பத்திரங்கள் சபையால் வழங்கப்படவில்லை என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அனுமதிக் கையொப்பம் சபை தவிசாளராலோ அல்லது உப தவிசாளராலோ வழங்குவது என்ற சர்ச்சை ஏற்பட்டுள்ளமையே இந்த இழுபறி நிலைக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

அனுமதிப்பத்திரம் வழங்க முடியாமல் 32 பிணக்குகள் கிடப்பில் உள்ளன. அத்துடன் அனுமதிப் பத்திரங்கள் சமர்ப்பித்தவர்களில் கட்டடங்கள் கட்டுவது தொடர்பில் நேரில் சென்று பார்ப்பதற்கு உபகுழுக்கள் அமைக்கப்பட்டும் அவற்றிற்கு அங்கீகாரம் இல்லாமல் தவிசாளர் நேரடியாகச் சென்று பார்வையிட்டு விண்ணப்பங்களில் கையொப்பம் இட்டு வழங்கியுள்ளார். இதனால் ஏனையவர்கள் குழப்பமடைந்துள்ளனர்.

தவிசாளரின் இவ்வாறான செயற்பாடு குறித்து மக்கள் விசனம் தெரிவிப்பதுடன் பிரதேச சபைக்குத் தாம் அலைந்து திரிவதாகவும் தெரிவித்துள்ளனர்.(104)

# தூதரகச் செயற்பாட்டை மட்டுப்படுத்தியது அமெரிக்கா

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தனது செயற்பாடுகளை மட்டுப்படுத்தியுள்ளது. கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் நடவடிக்கைகள் மட்டுப்பட்டதாகவும், அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்னால் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளதாக கிடைத்த தகவலையடுத்தே தூதரகத்தின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவும், அமெரிக்கத் தூதரக தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம்களின் இறைதூதரை கேவலப்படுத்தும் வகையில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட திரைப்படத்தைக் கண்டித்து நாடு முழுவதும் அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

### பிரதேச...

தவிசாளர் டொமினிக் அன்ரன் பிரதேச சபை உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன், தியாகராஜா ஆகியோரும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் முருகவேல் ஆகியோரும் திணைக்களங்களின் தலைவர்களும் அரச உத்தியோகஸ்தர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.(29)

# மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போர்; யாழ். இந்துவில் சலசலப்பு

யாழ். இந்துக்கல்லூரி மாணவன் ஒருவன் ஆசிரியரினால் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்த வகுப்பு மாணவர்கள், மறுநாள் புதன்கிழமை வகுப்புக்களுக்குச் செல்லவில்லை. இதையடுத்து மறுநாள் வியாழக்கிழமை வகுப்புகளுக்குச் சென்ற மாணவர்களை பாடசாலைக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் வெளியே நின்றிருந்தனர். இதற்கு உடன் நடவடிக்கை எடுக்கக்கோரி நேற்றுக் காலை பாடசாலை ஆரம்பமான வேளையில் பகிஷ்கரிப்பில் மாணவர்கள் ஈடுபட்டனர்.

அங்கு விரைந்த பொலிஸார் மாணவர்களை கலைந்து போகுமாறு உத்தரவிட்டதுடன், மாணவனைத் தாக்கிய ஆசிரியரை அழைத்து அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. மாணவரின் செயற்பாடுகள் சரியில்லை என்றும் ஒழுக்கக் கேடாகவும், கைத்தொலைபேசிகளை பாவிப்பதாகவும், தலைமுடி, தாடி வளர்த்து வருவதாகவும் ஆசிரியர்களை அவமதித்து கூக்குரலிட்டதாகவும் இதனால் ஆத்திரமடைந்து மாணவனைத் தாக்கியதாக ஆசிரியர் தெரிவித்தபோது,

மாணவர்களைத் தாக்கும் உரிமை ஆசிரியர்களுக்கு இல்லை. அதற்கான தண்டனை மாணவனை உடல் ரீதியாகப் பாதிக்கக்கூடாது என்றும் இதனை அதிபரினூடாக மாணவனின் பெற்றோருக்கு முறையிட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமே ஒழிய மாணவனைத் தாக்குவது குற்றமான செயலாகும். அவ்வாறு பாடசாலையின் கட்டுப்பாட்டுக்குள் வராத மாணவனைப் பாடசாலையில் இருந்து நீக்கி விடுவது சிறந்தது. அவ்வாறான தண்டனைகளை வழங்குங்கள், மாணவனின் உடல் காயப்படும்படியாக தண்டனைகள் வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா மாணவனைத் தாக்கிய ஆசிரியருக்கு ஆலோசனை வழங்கினார்.

மாணவர்கள் கல்லூரியின் கட்டுப்பாடுகளுக்கு அமைவாக நடக்க வேண்டும் என்றும் அவ்வாறு நடக்காமல் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் சிறுவர் நன்னடத்தைப் பிரிவுகளுக்குத்தான் செல்லவேண்டி இருக்கும் என்றும தெரிவித்தார். இவ்வாறு நடப்பது முதல் தடவை அல்ல. இது போன்ற பிரச்சினைகள் வருவதை மாணவர்கள், ஆசிரியர்கள் தான் தடுக்கவேண்டும். இதை பெரிய விடயமாக்கி பொலிஸ் நிலையத்திற்கு வருவதைத் தவிர்த்து எதிர்காலத்தின் வளர்ச்சி பற்றி சிந்தியுங்கள் என்றார். (இ)

# இராணுவப் பயிற்சி நிறைவு

ஐந்து நாடுகளைச் சேர்ந்த இராணுவத்தினரின் பங்குபற்றுதலுடன் தொப்பிகல, வாகரைப் பிரதேசங்களில் ஒரு மாத காலமாக இடம்பெற்று வந்த முப்படைகளின் கூட்டு இராணுவப் பயிற்சிகள் நேற்று முன்தினத்துடன் நிறைவுபெற்றன. சீனா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைச் சேர்ந்த 39 முப்படை அதிகாரிகளும் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 2500 வீரர்களும் இந்தக் கூட்டுப் பயிற்சிகளில் பங்குபற்றினர்.

'நீலத் தீவு' மற்றும் 'சிவப்புத் தீவு' என்ற இரண்டு நாடுகளுக்கு இடையில் இடம்பெறும் யுத்தம் என்ற அடிப்படையில் தொப்பிகல (குடும்பிமலை) வாகரை, புன்னக்குடா ஆகிய பிரதேசங்களில் கடந்த ஒரு மாத காலமாக இரண்டு கட்டங்களாக இந்தப் பயிற்சி இடம்பெற்று வந்தது. வாகரைப் பிரதேசத்தில் நேற்று மாலை இடம் பெற்ற நிறைவு நாள் பிரதான கூட்டுப் பயிற்சி நடவடிக்கைகளை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய உட்பட முப்படைகளின் உயர் அதிகாரிகள் நேரில் பார்வையிட்டனர்.

இந்த விஷேட பயிற்சி நடவடிக்கையில் இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் இராணுவத்தின் கொமாண்டோ படைப் பிரிவுகள் பங்குபற்றின. கடந்த ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி முதல் ஆரம்பமான திட்டமிடல் மற்றும் திட்டங்களை தயாரித்தல் தொடர்பான பயிற்சி இம்மாதம் 9 ஆம் திகதி நிறைவு பெற்றதுடன் இரண்டாம் கட்டப் பயிற்சி இம்மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்றுடன் நிறைவு பெற்றது.

### வடக்கிற்கு...

யுத்தத்திற்குப் பின்னர் இம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் பல்வேறு துறை சார்ந்த செயற்திட்டங்கள் தொடர்பாகவும் இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவிருக்கிறது.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் அரச அதிபர், பிரதேச செயலர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோர் உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குகொள்ள உள்ளனர்.

# ஒன்பது மாத காலப் பகுதியில் மட்டும் ஆயிரத்து 500 பேர் விபத்தில் பலி

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்று வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்துக்களினால் 1,500 பேர் உயிரிழந்தாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் நாடு முழுவதுமாக 25 ஆயிரம் வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

இந்த விபத்துக்களின் காரணமாக 13 ஆயிரம் பேர் காயமடைந்தும் உள்ளனர். வாகன விபத்துக்களுக்கு மது போதையில் வாகனத்தை செலுத்தியுள்ளமையே பிரதான காரணமாக அமைந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்..

கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் நேற்றுக் காலை 6 மணி வரையிலான காலப்பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 2 ஆயிரத்து 48 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் பயணிகள் பேருந்து சாரதிகள் 15 பேரும் அடங்குகின்றனர். இதேவேளை, ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இன்று வரை மதுபோதையில் வாகனம் செலுத்திய 23 ஆயிரத்து 521 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 11 ஆயிரத்து 85 சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரம் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளன. மேலும் 45 சாரதிகளின் அனுமதிப் பத்திரம் நிரந்தரமாக ரத்து செய்யப்பட்டுள்ளன. மதுபோதையில் வாகனம் செலுத்தி பொலிஸாரிடம் சிக்கி வழக்குத் தாக்கல் செய்து குற்றம் நிரூபிக்கப்பட்டால் மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டம் 151 ஆவது அத்தியாயத்தின் 216 ஆவது சரத்தின்படி பின் வரும் தண்டனைகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிகரெட் வழங்க மறுத்த கடைக்காரர் கொலை

(வவுனியா)

வவுனியாவில் கடை உரிமையாளர் ஒருவர் சிகரெட் வழங்க மறுத்தமையால் அவர் கல்லால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர் பில் விசாரணை மேற்கொண்ட வவுனியாப் பொலிஸார், 17 வயதுடைய சிறுவன் ஒருவனை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். வவுனியா, ஓயார் சின்னக்குளம் பகுதியைச் சேர்ந்த தங்கராசா (வயது-70) என்பவரே இவ்வாறு பலியானவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா, ஓயார் சின்னக்குளம் பகுதியில் உள்ள தங்கராசா என்பவரின் கடைக்கு மது போதையில் சென்ற அந்தப் பகுதியை சேர்ந்த ஒருவர் தனக்கு சிகரெட் தருமாறு வற்புறுத்தியுள்ளார்.

எனினும் கடை உரிமையாளர், 21 வயதுக்கு குறைந்த எவருக்கும் தன்னால் சிகரெட் வழங்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

பின்னர் இவர் அந்தப் பகுதியில் உள்ள மதுபானச்சாலையில் மது அருந்திவிட்டு வந்து கடை உரிமையாளரை கல்லால் தாக்கியுள்ளதாகவும் இதன்போது கடை உரிமையாளர் சம்பவ இடத்திலேயே பலியானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மகசின் சிறையில் 100 கைத்தொலைபேசிகள்

(கொழும்பு)

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவினர் இணைந்து நேற்றுத் திடீர் சுற்றி வளைப்புத் தேடுதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தேடுதலின்போது, கைதிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த 100 கையடக்கத் தொலைபேசிகள், தொலைபேசி இணைப்பு அட்டைகள் (sim Cards) மற்றும் ஹெரோயின் போதைப் பொருட்கள் உட்பட பெருமளவு உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

## இராஜினாமாவை வாபஸ் பெற்றார் மாலினி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல நடிகையுமான மாலினி பொன்சேகா, தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாக எடுத்த முடிவை மாற்றிக்கொள்வதாகவும் தான் கையளித்த இராஜினாமா கடிதத்தை மீளப்பெற்றுக் கொள்வதாகவும் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பிரகாரமே தான் இந்த முடிவுக்கு வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். மற்றுமொருவருக்கு வாய்ப்பளிப்பதற்காகவே தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ,ராஜினாமா செய்யவிருந்ததாக மாலினி பொன்சேகா ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்தார்.

## மாகாண முதலமைச்சர் தெரிவு முறையில் மாற்றம்

உள்ளூராட்சி மன்றங்களினதும், மாகாண சபைகளிலும் விருப்பு வாக்குகளை அடிப்படையாகக் கொள்ளாது, தொகுதி வாரியான தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளதால் எதிர்காலத்தில் சிக்கலானதொரு நிலைமை ஏற்படாதென ஜனாதிபதி குறிப்பிடுகின்றார். ஜனாதிபதி மாளிகையில் நேற்று முற்பகல் நடைபெற்ற கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண முதலமைச்சர்கள் மற்றும் மாகாண அமைச்சர்கள் சத்தியப் பிரமாணம் செய்வதற்கான நிகழ்வில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதிக விருப்பு வாக்குகளை அடிப்படையாக வைத்து, முதலமைச்சர் பதவி வழங்கப்படும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கின்றார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

மக்களிடையே ஏற்பட்டுள்ள பேதங்களை இல்லாமற் செய்வதற்கு முதலமைச்சர்கள் மற்றும் மாகாண அமைச்சர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென ஜனாதிபதி இதன்போது கூறினார். மாகாண சபைகளின் ஊடாக சிறந்த மக்கள் சேவையை பெற்றுக்கொள்ளுதல் அனைவரினதும் பொறுப்பென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தமது மாகாணங்களை அபிவிருத்தி செய்தல் மாகாண சபையின் அனைத்து பிரதிநிதிகளினதும் எதிர்பார்ப்பாக இருக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

## புற்றுநோயைக் கண்டறிய வருகிறது புதிய கருவி


(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஆரம்பத்தில் புற்றுநோயை இனம்காணும் கருவியினை சர்வதேச புற்றுநோய் ஆராட்சி நிறுவனம் எதிர்வரும் 28 ஆம் திகதி வழங்கவுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் பவானந்தராஜா தெரிவித்தார்

பெண்களின் மார்பகங்களில் ஆரம்பத்திலேயே புற்றுநோய் இருக்கின்றதா என்பதை அறிவதற்காக இந்தக் கருவியை இந்த நிறுவனம் வழங்குகின்றது. உலக சுகாதார நிறுவனத்தின் உதவியுடன் பல மில்லியன் பெறுமதியான இந்த உபகரணத்தை யாழ்.புற்றுநோய் வைத்தியர் விடுதிக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தக் கருவி இல்லாமையினால் புற்றுநோயாளர்களை கொழும்புக்கு அனுப்பி வைத்து பரிசோதிக்கப்பட்டு வந்தது. எனவே இந்தக் கருவி யாழ். போதனா வைத்தியசாலைக்கு கிடைத்துள்ளமையானது பெரும் வரப்பிரசாதம் என யாழ் .போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானந்தராஜா மேலும் தெரிவித்தார்.

## முதலமைச்சர் பதவியேற்பு



வடமத்திய மாகாண முதலமைச்சராக முன்னாள் விவசா[illegible] மற்றும் வனவிலங்கு அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவின் சகோ[illegible]தரர் எஸ்.எம். ரஞ்சித், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். இதேவேளை, சப்ரகமுவ மாகாண முதலமைச்சராக மகிபால ஹேரத்தும் ஜனாதிபதி முன்னிலையில் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற இவ்வைபவத்தின் போது வடமத்திய சப்ரகமுவ மற்றும் கிழக்கு ஆகிய மாகாண சபைகளுக்கான அமைச்சர்களும் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உட்பட பல பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்துக் கொண்டனர்.

## மணியந்தோட்டத்தில் குடிசைகள் தீயில் எரிந்து நாசம்

மணியம்தோட்டப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தால் குடிசைகள் எரிந்து நாசமாகியுள்ளதால் குடியிருப்பாளர்கள், உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

நேற்று இரவு 7.00 மணியளவில் தற்செயலாகக் குடிசை ஒன்றில் ஏற்பட்ட தீ, காற்றினால் ஏனைய குடிசைகளுக்கும் பரவியது. குறித்த பகுதி மக்கள் தீயணைக்க முயற்சித்த அதேவேளை கிராம அலுவலர் ம.ஞானேந்திரன் ஈ.பி.டி.பி.யின் நல்லூர்ப் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவ[illegible]மான அ.இரவீந்திரதாசனுக்கு தகவல் தெரிவித்ததையடுத்து அவர் உடனடியாக யாழ்.மாநகர சபை தீயணைப்பு படையினருக்கு தகவல் வழங்கியதையடுத்து உடனடியாகச் செயற்பட்ட யாழ்.மாநகர சபை தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்குச் சென்று தீயைக் கட்டுப்பாட்டுக்கு. கொண்டு வந்தனர்.

## வன்னி மாவட்ட எம்.பி. விபத்தில் காயம்





புத்தளத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தொன்றில் காயமடைந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் மற்றும் 6 பேரும் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த இவர்களின் வாகனம், காலை 6.30 மணியளவில் புத்தளம், பத்துளுஓயா பகுதியில் பாதையை விட்டு விலகிச் சென்று விபத்திற்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ் விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.


## தேவை

### வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

**1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை 5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு 9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம் 12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு**

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.